Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028பங்குனி 12 செவ்வாய்க்கிழமை (25-03-1997)UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 118

## மேலும் 1,028 பேர் வன்னியிலிருந்து படகுகளில் நேற்று யாழ். வந்தனர்

குருநகர், மார்ச் 25

வன்னிப் பகுதியில் இருந்து மேலும் 1028 பேர் நேற்று படகுகளில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

சூரியப்பிரகாசம் இராணுவ நடவடிக்கையின் போது யாழ்ப்பாணத்திலிருந்துஇடம் பெயர்ந்து வன்னிப் பகுதியில் உள்ள வலைப்பாடு, நாச்சிக்குடா, செம்மண்குன்று ஆகிய பகுதிகளில் தங்கி இருந்தவர்களிலேயே 1,028 பேர் நேற்று வந்து சேர்ந்தனர்.

நேற்றுக் காலை 7.00 மணி அளவில் தமது படகுகளில் வெள்ளைக் கொடிகளைப் பறக்கவிட்டவாறு குருநகர் இறங்கு துறையை இவர்கள் வந்தடைந்தனர்.

26 பிளாஸ்ரிக் படகுகள், ஓர் இயந்திரப்படகு, 49 வள்ளங்கள் ஆகியவற்றில் இவர்கள் வந்துள்ளனர். இவர்கள் பாஷையூர், குருநகர், சாவற்காடு, கொழும்புத்துறை ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக் காலை உணவு குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம், குருநகர் கடற்றொழில் சிறகுவலைச் சங்கம் ஆகியவற்றால் இவர்களுக்கு வழங்கப்பட்டது. மதிய உணவு யாழ். கச்சேரி புனர்வாழ்வுப் பகுதியால் வழங்கப்பட்டது.

முன்னர் வந்த அகதிகளைப் பாடசாலைகளில் தங்க வைத்து பராமரித்தது போன்று இவர்களையும் பாடசாலைகளில் வைத்து பராமரிக்க அனுமதிகிடைக்கவில்லை.

அதனால் இவர்கள் அனைவரையும் இராணுவ விசாரணைகள் முடிவடையும் வரை குருநகர் சீநோர் வலைத் தொழிற்சாலையில் தங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்கு இடம்பெயர்ந்து சென்று வாழ்ந்துவந்து மக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



சொன்னால் போதுமா..? கைகூடவும் வேணுமே.....!

## 3 கப்பல்களில் 940 பேர் இன்று பயணம்

யாழ்ப்பாணம், மார்ச் 25

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு 3 கப்பல்களில் 940 பயணிகளை இன்று அழைத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் மோதல்

கொழும்பு, மார்ச் 25

திருகோணமலை, கலராவப்பகுதியில் பாதுகாப்புப் படையினருக்கும், புலிகளுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றது.

இந்த மோதலில் ஒரு படைவீரர் கொல்லப்பட 5 பேர் காயமடைந்தனர் என்றும் —பாதுகாப்புப் படையினரின் பதில் தாக்குதலின்போது 10 புலிகள் கொல்லப்பட்டிருக்கலாம் அல்லது காயமடைந்திருக்கலாம் என்றும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் தெரிவித்தது.

(இ-5)

## ஊர்காவலர் சுட்டுக்கொலை; ஆயுதம் அபகரிப்பு

கொழும்பு,மார்ச் 25

மாதுறு ஓயாவுக்கு அருகிலுள்ள குடா ஓயா என்னும் இடத்தில் கடமையில் இருந்த ஊர்காவல் படைவீரர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் நேற்றுக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# அரசு - விடுதலைப் புலிகள் பேச்சுக்கு மத்தியஸ்தம் வகிக்க அரபாத் தயார்!

## கொழும்பில் அவரே அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 25



இனப்பிரச்சினையை சமாதானமாகத் தீர்த்து வைப்பதற்காக இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமரசப் பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கு மத்தியஸ்தம் செய்வதற்குத் தாம் தயாராக உள்ளதாக --

பலஸ்தீன அதிபர் யசீர் அரபாத் அறிவித்துள்ளார்.

கொழும்பில், தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நேற்று ஆற்றிய விசேட சொற்பொழிவின் போது யசீர் அரபாத் இந்த அறிவித்தலைச் செய்தார்.

பலஸ்தீனிய ஒருமைப்பாட்டுக்கான இலங்கைக் குழுவின் அனுசரணையுடன் வெளிவிவகார அமைச்சு யசீர் அரபாத்தின் விசேட சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்திருந்தது.

நேற்று மாலை நிகழ்த்திய அந்தச் சொற்பொழிவில் பலஸ்தீன அதிபர் மேலும் தெரிவித்ததாவது:

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்புச் சிறுபான்மையினர் ஐ.தே.க வுக்கே வாக்களித்தனர்

### அமைச்சர் பௌசி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 25

''கொழும்பு மாநகர சபைப் பகுதியில் வாழும் சிறுபான்மை இன மக்களின் வாக்குக்கள் எமக்குக்கிடைக்கும் என எதிர்பார்த்தோம். ஆனால் அவர்களின் வாக்குக்கள் ஐ. தே. க. பக்கமே திரும்பியுள்ளன''

(8 ஆம் பக்கம் பார்க்க)

### நாலந்தா கொலைச் சந்தேக நபர்

## மகிந்த ரட்ண திலக்கவுக்கு கூடுதல் விருப்பு வாக்குகள்

இரத்தினபுரி, மார்ச் 25

இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாலந்த எல்லாவெல படுகொலை தொடர்பான சந்தேக நபர்களில் அடையாள அணிவகுப்பில் அடையாளம் காணப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள 9 பேரில் இருவர் ஐ. தே. கட்சி சார்பில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டனர்.

இவர்களில் இரத்தினபுரி முன்னாள் மேயர் மஹிந்த ரட்ணதிலக்கவும் ஒருவர். இவர் இரத்தினபுரி நகர சபைக்கு ஐ. தே. கட்சியின் பட்டியலில் போட்டியிட்டார்.

ஆனால் விருப்பு வாக்குகளில் ஐ. தே. கட்சியின் பட்டியலில் மஹிந்த ரட்ண திலக்க அதிகமான விருப்பு வாக்குகளைப் பெற்று பட்டியலில் முதலாவதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் பெற்ற வாக்குகள் 8 326 ஆகும்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# முல்லை கடலில் நேற்று அதிகாலை புலிகள்-கடற்படையினர் மோதல்

## 4 மணி நேரம் நீடித்ததாகத் தகவல்

கொழும்பு, மார்ச் 25

முல்லைத்தீவுக் கடலில் நேற்று அதிகாலை விடுதலைப் புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையில் நான்கு மணி நேரமாகக் கடும் மோதல் நடைபெற்றதாக அறிவிக்கப்படுகிறது.

கடற்படையினரின் கப்பல் அணி ஒன்றைக் கடற்புலிகள் சுற்றிவளைத்துத் தாக்குதல் நடத்தியதாகவும் அதனைத் தொடர்ந்தே இரு தரப்பாருக்கும் இடையே மோதல் மூண்டதாகவும் கூறப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு எதிராக கடற்படையினர் தாக்குதல் நடத்தி முறியடித்துவிட்டதாக பாதுகாப்பு அமைச்சின் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதல் குறித்து புலிகளின் தரப்பில் இருந்து தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலாபம் வன்செயல்களை அடுத்து ஐ.தே. கட்சி ஆதரவாளர்கள் கைது!

கொழும்பு, மார்ச் 25
சிலாபம் நகரில் ஐக்கிய தேசியக்கட்சி வெற்றியீட்டியதை அடுத்து ஏற்பட்ட வன்செயல்கள் தொடர்பாக 14 பேரைப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் புதிதாகத்தெரிவு செய்யப்பட்ட நகராட்சிமன்ற உறுப்பினர் ஆவார்.

வடமேல் மாகாணசபை ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர் ஒருவரையும் இந்த வன் செயல்கள் தொடர்பாக சிலாபம் பொலீஸார் தேடி வருகின்றனர்.

சிலாபம் நகர சபையின் முன்னாள் தலைவர் ஒருவரும் இன்னுமொரு ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் ஒருவரும் தேடப்பட்டுவருகின்றனர். இவர்கள் தலைமறைவாகி இருப்பதாக நம்பப்படுகின்றது.

சிலாபம் சிங்கபுர பிரதேசத்தில் வசிக்கும் பொது மக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள் இருவரினதுவீடுகளையும் வாகனங்களையும் மேற்படி சந்தேக நபர்கள் சேதப்படுத்தியுள்ளனர் என்றும்—

சேதமாக்கப்பட்ட உடைமைகளின் பெறுமதி6 லட்சம் ரூபா எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள 14 சந்தேகநபர்களும் 27 ஆம் திகதி வரை தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர் (இ-5)

## ராவய ஆசிரியருக்கு அழைப்பாணை

கொழும்பு, மார்ச் 25
பொது நிர்வாக அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவை அவதூறு செய்ததாகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குத் தொடர்பாக ராவய பத்திரிகையின் ஆகிரியரான விக்ரர் ஐவனை அடுத்தமாதம் இரண்டாம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகும்படி கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதிஅழைப்பாணை அனுப்பியுள்ளார்.

(இ-5)

## சில இடங்களில் வாக்குப்பெட்டி களவு
### பொலீஸார் மீது நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 25
கடந்த வாரம் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களின் போது பெலியத்தை, வெள்ளவாயா ஆகிய இடங்களில் வாக்குப் பெட்டிகள் களவாடப்பட்டன.

இத்துடன் வாக்காளர் இடாப்புகள் பறிக்கப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

சம்பந்தப்பட்ட வாக்களிப்பு நிலையங்களில் பணியாற்றிய பொலீஸார் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

## ஊரடங்கு சட்டத்தை பயன்படுத்தி அராலிப்பகுதியில் மாடுகள் திருட்டு

அராலி, மார்ச் 25
இரவோடு இரவாக மாடுகள் காணாமல் போவதும்—

பின்னர் அவை இறைச்சிக்காக வெட்டப்படுவதும்— அராலிப்பகுதியில் அதிகரித்து வருகின்றன.

இரவு வேளைகளில் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள நேரம் பொதுமக்கள் வீட்டுக்கு வெளியே செல்ல முடியாத நிலைமையை திருடர்கள் தமக்குச் சாதகமாக பயன்படுத்தி மாடுகளைக் கடத்திச் செல்கின்றார்கள்.

கடந்த வாரம் இரவுவேளையில் அராலி மேற்குப் பகுதியில் பட்டியில் நின்ற பசுமாடு ஒன்று திருடப்பட்டு இறைச்சிக்காக வெட்டி விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மேற்படி மாடு எட்டு மாத கர்ப்பம் தரித்த நிலையிலேயே வெட்டப்பட்டுள்ளதாக மாட்டுச் சொந்தக்காரர் தெரிவித்தார். (இ-12)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கந்தையா அன்னம்மா

திருநெல்வேலி கேணியடி அரசடி வீதியைப் பிறப்பிடமாகவும் இல. 113, கிராம அபிவிருத்தித் திட்டம் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா அன்னம்மா 24-3-97 மாலை காலமானார்.

இவர் பவளக்கொடி, காலஞ்சென்ற இராசலிங்கம், தேவி, தவம் ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்லத்துரை, இளையதம்பி, காலஞ்சென்ற சந்திரராசா ஆகியோரின் மாமியாரும், மணி, பத்மநாதன், றதிகாந்தன், தயாபரன், றஞ்சா, மனோகரன், யசோதரன், பிரபாகரன், மாலதி (மாணவி, இராமநாதன் நுண்கலைப்பீடம்). காலஞ்சென்ற விஜிதா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25-3-97) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2 மணி அளவில் செம்பாட்டு மயானத்தில் தகனம் செய்யப்படும், இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
க. இளையதம்பி
(மருமகன்)
113, கிராம அபிவிருத்தித்திட்டம்,
திருநெல்வேலி.
(45978)

### செல்லத்துரை சரவணமுத்து

சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. செல்லத்துரை சரவணமுத்து 23-03-97 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் பேரின்பவல்லியின் அன்புக் கணவரும் கிரிஷாந்தியின் பாசமிகு தந்தையும், திருமதி அன்னரத்தினம் முருகேசபிள்ளை, காலஞ்சென்ற பத்மநாதன், அருணாசலம், திருமதி செல்வரத்தினம் கணேசன், திருமதி யோகேஸ்வரி பரமநாதன், இரங்கநாதன், சோமசுந்தரம், கனகசுந்தரம், திருமதி சறோஜினிதேவி லோகநாதன், திருமதி கமலாதேவி கனகலிங்கம், இராசதுரை, திருமதி ஜெயதேவி கனகநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24-03-97 அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் வழுக்கியாறு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது, இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஜயந்தி
(மருமகள்)
சண்டிலிப்பாய்
வட்டுக்கோட்டை கிழக்கு,
சித்தன்கேணி.
(45971)

### வே. ஆதர் செல்வநாயகம்

(ஆசிரியர், கலைமகள் வித்தியாலயம்,
பிரான்பற்று, பண்டத்தரிப்பு.)

சண்டிலிப்பாயைச் சேர்ந்த ஆதர் செல்வநாயகம் அவர்கள் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற வேதநாயகம் போல் (J·P) திருமதி செல்வமணி வேதநாயகம் போல் அவர்களின் அன்பு மகனும், இங்கிர்தமலர், டிக்சன், ஜெயபாலன் (பாடசாலை அதிபர், மட்டக்களப்பு), சாள்ஸ், குணசீலன் (படவரைஞர் திருகோணமலை), ஜேம்ஸ் அரியரட்ணா (சிமெந்துத் தொழிற்சாலை ஊழியர், உளவளத்துணையாளர்), பீற்றர் தனராஜசிங்கம் (பொறியியலாளர், வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஆம்ஸ்றோங், கிறேஸ், றொசானி, ஜெபகுமாரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை 26-03-97 நாளை புதன்கிழமை காலை10.00 மணியளவில் இடம்பெறும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே. ஜேம்ஸ் அரியரட்ணம்
(சகோதரன்)
மாகியம்பதி,
சண்டிலிப்பாய்.
(9430)

## ஏ. ஆர். வி. தடுப்பு மருந்து வந்து சேர்ந்தது

திருநெல்வேலி, மார்ச் 25
யாழ். சுகாதாரத்திணைக்கள மாவட்ட மருந்துக் களஞ்சியத்திற்கு ஏற்பு தடுப்பு ஊசி மருந்து, விசர் நாய்க் கடிக்கான ஏ. ஆர். வி ஊசி மருந்து என்பன கொழும்பிலிருந்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவின் கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. யாழ். சுகாதாரப் பிராந்தியத்திலுள்ள அரச வைத்திய சாலைகளுக்கு இவை விநியோகிக்கப்பட்டுள்ளன. இதனால் இவற்றுக்கு நிலவிய தட்டுப்பாடு நீங்கியுள்ளது.

(ஐ-135)

## பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரணம்

தென்மராட்சி, மார்ச் 25
பாதிக்கப்பட்ட தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த மீனவர்களுக்கான ஐந்தாம், ஆறாம் கட்ட நிவாரண உலர் உணவுப் பொருள்கள் அந்தந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் வழங்கப்படுகின்றன.

இதேவேளை பாதுகாப்பு அரண் நிமித்தம் இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கான நிவாரணப் பொருள்களும் ப. நோ. கூ. சங்கக் கிளைகளில் வழங்கப்படுவதாக பதில் பிரதேச செயலர் க. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

(இ-117)

## ஜே.83 அ. அட்டை

யாழ்ப்பாணம், மார்ச் 25
கொட்டடி ஜே/83—கிராம சேவையாளர் பிரிவுக்குரிய விசேட அடையாள அட்டைகள் நாளை புதன்கிழமை, காலை 9.00 மணிக்கு கொட்டடி நமசிவாயம் வித்தியாலயத்தில் வைத்து வழங்கப்படும். (இ)

## கருத்தரங்கு

திருநெல்வேலி, மார்ச் 25
யாழ். பல்கலைக்கழக கலை வட்டத்தின் மாதாந்த கருத்தரங்கு தொடரில் எதிர்வரும் வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பொருளியல் துறை மண்டபத்தில் தமிழ் துறை பேராசிரியர் நா. சுப்பிரமணிய ஐயர் ‘‘தலித்தியமும் அதன் கலை இலக்கிய பார்வையும்’’ என்ற விடயம் பற்றி உரை நிகழ்த்துவார். (இ-135)

## கட்டாக்காலி மாடுகளினால் வயல்களில் எள்ளுப்பயிர் அழிவு

நவாலி, மார்ச் 25
ஆனைக்கோட்டை, நவாலி, கல்லுண்டாய்ப்பகுதியில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகரித்துள்ளது.

கட்டாக்காலி மாடுகளால் வயல்களில் எள்ளுப் பயிர்கள் அழிக்கப்பட்டுவருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

(இ-100)


### நடனமுருகன் வைத்தியநிலையம்

வன்னியில் இயங்கிய நடனமுருகன் வைத்திய நிலையம் மீண்டும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, சத்திரச்சந்தியில் தனது சேவையைத் தொடர்கிறது.

**கிளைநிலையம்: வேலணை தெற்கு, வேலணை.**

(45976)


### யாழ். பல்கலைக்கழக கலை வட்டத்தின்

ஆதரவில்

**தலித்தியமும்**
அதன்
**கலை இலக்கியப் பார்வையும்**

பேராசிரியர் நா. சுப்பிரமணியன்
(தலைவர், தமிழ்த்துறை)

இடம்: யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொருளியல் மண்டபம்
காலம்: 27 - 03 - 97 மாலை 3 மணி
(புதிய நேரம்)

தலைவர்,
கலை வட்டம்.
(45977)

## கண்ணீர் அஞ்சலி

### வே. ஆதர் செல்வநாயகம்

எமது பாடசாலையின்
உப அதிபரும், விஞ்ஞான ஆசிரியருமாகிய
**வே. ஆதர் செல்வநாயகம் அவர்கள்**

கடந்த சனிக்கிழமை அதிகாலை இறைவனால் அழைக்கப்பட்டு விட்டார். தொடக்கத்திற்கு முடிவு உண்டு என்கிறது அறிவு. ஆனால் ஏனோ மனம் குழம்பி கண்கள் குளமாகி விடுகின்றன. அந்த நீர்த்திவலைகளால் எங்களது இறுதி அஞ்சலியைச் செலுத்துகின்றோம். உறவினர், நண்பர்களுக்கு ஆறுதலும் கூறுகின்றோம். அவரின் ஆன்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர்கள், பெற்றோர்.

யா/ பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்,
பண்டத்தரிப்பு.

(45979)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானப் பேச்சுக்களைத் தொடர இஸ்ரேல் நிபந்தனைகள் விதிப்பு

ரெல் அவிவ், மார்ச் 25

பலஸ்தீனியர்களுடன் சமாதானப் பேச்சு வார்த்தையை மீண்டும் தொடர இஸ்ரேல் ஆறு முன்நிபந்தனைகளை விதித்திருக்கிறது.

இஸ்ரேலிய அமைச்சரவையின் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் இந்த நிபந்தனைகள் குறித்து தீர்மானிக்கப்பட்டது.

பலஸ்தீனியவிடுதலை இயக்கம் ஏற்கனவே அளித்த வாக்குறுதியின் படி பயங்கரவாதச் செயல்களுக்கு எதிராகப் போராட வேண்டும் என்பது முதல் நிபந்தனையாகும் என்று பிரதமர் நந்தினியாகு வலியுறுத்தினார்.

★ பாதுகாப்புத் துறையில் இஸ்ரேலுடன் பலஸ்தீன விடுதலை இயக்கம் ஒத்துழைத்தல்.

★ பயங்கர வாதிகளைக் கைது செய்து தண்டித்தல்.

★ சட்டவிரோதமான ஆயுதங்கள் வைத்திருப்பதைத் தடுத்து அவற்றைக் கைப்பற்றுதல் — என்பன ஏனைய முக்கிய நிபந்தனைகளாகும்.

ஆனால் இந்த முன் நிபத்தனைகள் அனைத்தையுமே பலஸ்தீன விடுதலை இயக்கம் நிராகரித்து விட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

( -10)

# பிரதமர் நியமித்த தளபதியை ஏற்க பாதுகாப்புப் படைகள் மறுப்பு!

## பபுவா நியுகினியில் நெருக்கடி

போட் மொறஸ்பி, மார்ச் 25

பபுவா நியுகினி நாட்டில் நிலவும் அரசியல் குழப்பங்களுக்கு முடிவுகாணும் வகையில் கடந்த வாரம் பாதுகாப்புப் படைகளின் தலைமைத் தளபதியாக நியமிக்கப்பட்ட கேணல் ஆபில் அயிகொங்கை அந் நாட்டுப் பிரதமர் ஜூலியஸ் சாங் பதவி நீக்கம் செய்துள்ளார்.

பாதுகாப்புப் படைகளின் தளபதியாக நியமிக்கப்பட்ட கேணல் ஆபில் அயிகொங்கிற்கு இராணுவத்தினர் உரிய மதிப்பை அளிக்காததே இதற்கு காரணமாகும்.

நாட்டில் நிலவும் பிரிவினைவாதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக இராணுவத்தில் வெளிநாட்டுக் கூலிப் படைகளை சேர்க்கும் பிரதமரின் திட்டத்தை முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெரி சிங்புரோக் எதிர்த்ததால் பிரதமர் கடந்த வாரம் அவரை பதவியிலிருந்து நீக்கினார்.

தற்போது பபுவா நியுகினிலிருந்து அதிகமான வெளிநாட்டுக் கூலிப்படைகள் வெளியேற்றப்பட்ட போதிலும் கூலிப்படைகளின் தலைவர் ஹிம்பைசா ஆயுத ஊழல் மோசடி தொடர்பான விசாரணைகளை எதிர்நோக்குகிறார். அவரது கடவுச் சீட்டு பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் அவருக்கு எதிரான விசாரணைகள் ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

(ஐ-10)

# உலக அரங்கில்

## ஓமான் குற்றச்சாட்டு

அம்மான், மார்ச் 25

இஸ்ரேலுடனான இராஜதந்திர உறவுகளை ஓமான் துண்டித்துள்ளது. இஸ்ரேலின் யூதக் குடியேற்றக் கொள்கையே மத்திய கிழக்கில் அமைதிக் குலைவுக்கு முக்கிய காரணம் என ஓமான் குற்றஞ் சாட்டியுள்ளது.

(இ-10)

# அல்பேனியாவுக்கு நிவாரணக் குழு அனுப்புவது பற்றி ஆலோசனை

ரிரானா, மார்ச் 25

கலவரங்களால் பாதிக்கப்பட்ட அல்பேனியாவுக்கு நிவாரணப் பணியாளர்களை அனுப்புவது பற்றித் தீர்மானிக்க ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிநாட்டு அமைச்சர்கள் பிறசெல்ஸ் நகரில் கூடியுள்ளனர்.

பல வாரங்களாக கொந்தளிப்பு நிலவியதை அடுத்து உணவு மற்றும் மருந்துப் பொருள்களுக்கு அல்பேனியாவில் தட்டுப்பாடு நிலவுகிறது.

அல்பேனியாவிலுள்ள முக்கிய துறைமுகங்கள் பல தற்போது அரசின் கட்டுப்பாட்டில் இல்லை. ரிரானாவுக்கான போக்குவரத்தை விமான நிறுவனங்கள் இன்னும் மீள ஆரம்பிக்கவில்லை. இதே வேளை அல்பேனிய மக்கள் தங்கள் நாட்டிலிருந்து வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்.

இத்தாலியின் தென்பகுதித் துறைமுகத்துக்கு 500 அல்பேனிய அகதிகளை ஏற்றிய கப்பல் ஒன்று சென்றுள்ளது.

# 38 இந்திய சிறுவர்களை பாகிஸ்தான் விடுவித்தது

இஸ்லாமாபாத், மார்ச் 25

கடந்த மூன்று ஆண்டுகளாக பாகிஸ்தான் சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த 38 இந்திய சிறுவர் சிறுமியர்களை கடந்த சனியன்று பாகிஸ்தான் அரசு விடுவித்துள்ளது.

இவர்கள் அனைவரும் பாகிஸ்தான் கடற்பரப்பினுள் அத்துமீறிப் பிரவேசித்து மீன்பிடித்துக் கொண்டிருந்த மீன்பிடிப் படகுகளில் இருந்த போது கைது செய்யப்பட்டவர்களாவர்.

அடுத்த வெள்ளிக்கிழமை இந்தியா பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கிடையே ஆரம்பிக்கும் வெளியுறவு அமைச்சர்களுக்கிடையேயான உயர் மட்டப் பேச்சுவார்த்தையை அடுத்து நல்லெண்ண அடையாளமாக இச்சிறுவர்கள் விடுவிக்கப்பட்டனர். சிறுவர்கள் வெள்ளையாடை உடுத்தப்பட்டு மாலை அணிவிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

ஒவ்வொருவருக்கும் அன்பளிப்பாக தலா பத்தாயிரம் ரூபாவை பாகிஸ்தான் அரசு வழங்கியுள்ளது. (ஐ-10)

## 40 பேர் பலி!

ஆப்கானிஸ்தானில் ஜலாலாபாத் நகரிலுள்ள தலிபான் அமைப்பின் இராணுவத் தலைமையகம் பாரிய வெடிகுண்டு விபத்தில் தகர்ந்துபோனமை பற்றிய செய்திகள் வெளியாகத் தொடங்கியுள்ளன.

சுமார் 200 தொன் நிறையுள்ள வெடிமருந்து அங்கு வெடித்த இராணுவ உயரதிகாரிகள் உட்பட சுமார் 40 பேர் கொல்லப்பட்டனர்.

# புரிந்துணர்வை வளர்ப்பது என்ற பெயரிலான 'ராகிங்' தீர்க்கப்படவே முடியாத ஒரு நோயா?

## யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஆசிரியர்களுக்கு மகஜர்

ஒரே அணியில் உள்ளவர்களில் ஒரு சிலர் செய்யும் தவறுகளுக்காக அல்லது சீர் கெட்ட செயலுக்காக அந்த அணியில் உள்ள எல்லோருமே கெட்ட பெயர் வாங்குவது வழக்கம்.

பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற்றுள்ள புதிய மாணவர்கள் மீதான ''ராகிங்'' பண்பு கெட்ட அளவுக்கு மோசமடைந்து வருவது குறித்து பலரும் மன வேதனைப்படுகிறார்கள். எல்லா மாணவர்களும் இதில் ஈடுபடுகிறார்கள் என்று அவர்கள் எண்ணக் கூடும்.

ஆனால் உண்மை இது. சுமார் நூறு பேர் தவிர்ந்த ஏனைய மூத்த மாணவர்கள் ''ராகிங்'' மாணவர் வதையாக மாறுவதை எதிர்க்கிறார்கள்; அதனை விரும்பவில்லை.

''ராகிங்'' கொடுமையில் ஈடுபடுவோரை அமைதி வழியில் சமாதான முறையில் மனம் மாற்றித் திருத்த வேண்டும் என்பது இரண்டாவது தரப்பினரின் விருப்பம்.

இவர்கள் தமது விருப்பத்தைப் பிரதிபலித்தும் தமது செயற்பாட்டுக்கு உதவுமாறு கேட்டும் பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு ஒரு மகஜரை கடந்த வாரம் கையளித்தனர்.

''ராகிங்'' தொடர்பான பின்னணியை மக்களும் தெரிந்து கொள்ளட்டும் என்பதற்காக அந்த மகஜரை இங்கே வெளியிடுகிறோம்.

பல்கலைக்கழகத்துக்கு நாங்கள் வரும் போது, பல்கலைக்கழக வாழ்க்கை பற்றி எமக்கு நிறையக் கற்பனைகள் இருந்தன பாடசாலைக் காலத்தை விடவும் வலுவான நட்புகள் பற்றியும், கருத்துப் பரிமாற்றங்கள் பற்றியெல்லாம் நிறையவே எதிர்பார்த்தோம். இப்போதெல்லாம் இது பற்றி இன்னும் நம்பிக்கை இழக்காத காத்திருப்பு மட்டுமே உள்ளது.

எந்த மனிதனுக்கும் தன்னுடைய கருத்தைச் சொல்வதற்கான உரிமை உண்டெனச் சொல்லப்படுகிறது. எங்களுக்கு 'ராகிங்' நடைமுறை உடன்பாடானதாக இருக்கவில்லை. அதனால், அதனை நாங்கள் ஏற்றுக் கொள்ள மறுத்தோம். இதுவொரு கருத்து நிலைப்பட்ட முடிவாகும்.

இதனால் 'ராகிங்' கொடுக்கின்ற எங்கள் சக மாணவர்களை, அவர்கள் எங்களைப் பார்ப்பது போல எதிரிகளாக நாங்கள் கருதவில்லை. இதனையொரு சமூகப்பிரச்சினையாகவே நாங்கள் பார்க்கிறோம். எனவே, எங்களது கருத்துக்களை எங்களுடைய நண்பர்களோடு பரிமாறிக் கொள்ள நாங்கள் விரும்பினோம். ஆனால் எங்களுக்கு முன்னால் பெரியதொரு சுவரை அவர்கள் கட்டினார்கள். எங்களைப் போல 'ராகிங்' முறைமை மீது உடன்பாடில்லாதவர்களை அவர்கள் பயங்கரமாகச் சித்திரித்தார்கள். 'Anti Ragger' என்று நாமகரணஞ் சூட்டி தீண்டத்தகாத ஜந்துக்கள் போல பிரஷ்டம் செய்தார்கள்; மாணவர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளில் பலவற்றிலிருந்து எங்களைத் தூர விலக்கி வைத்தார்கள்.

இது தொடர்பாக மிகக் கசப்பான, வேதனையான அனுபவங்கள் எம்மிடமுண்டு. தனிப்பட்டவர்களின் வாழ்க்கையைப் பாதிக்குமளவுக்கு பல விடயங்கள் நடந்து முடிந்துள்ளன. ஆனால் அதற்கான பரிகாரத்தைக் கோரியல்ல இம்மடல், இந்தச் சீரழிவான நிலைமைகளின் தாற்பரியங்களை உங்களோடு பரிமாறிக் கொள்வதற்காகவே இதனை நாங்கள் எழுதுகிறோம். சில தனிப்பட்ட மாணவர்கள் மிகக்கேவலமாக நடந்து, மிகமோசமான நிலைமைகளை எங்களுக்கு உருவாக்கினார்கள். அதற்குத் தண்டனை அளியுங்கள் எனக் கேட்டுமல்ல இந்த மடல்.

நாங்கள் வெவ்வேறு திக்குகளில் இருந்து வந்தோம்; வெவ்வேறு பொருளாதார நிலைமைகள், குடும்பச் சூழ் நிலைகளில் இருந்தெல்லாம் நிறைய எதிர்பார்ப்புக்களோடு வந்தோம்.

நாங்கள் எங்கள் சகோதரிகளிடம், தாயிடம் பிறர் எவ்வாறு நடக்கக்கூடாது என விரும்பினோமோ, அந்த விரும்பத்தகாத நடத்தைகளை பிறபெண்கள் மீதும் செய்ய நாம் விரும்பவில்லை. அவர்களது உள்ளாடைகள் பற்றியும், பாலுறுப்புக்கள் பற்றியும் அல்லது அதற்கு சற்று மீறியும் ராகிங்கில் நடந்து கொள்ளும் முறை எங்களுக்கு மிகச்சங்கடத்தையும் வேதனையையும் தருகிறது.

மாணவர்களை அறைகளுக்கு இட்டுச் சென்று நிர்வாணமாக்கி கயமைத்தனம் செய்விப்பது, சிகரட்டால் உடலில் சுடுவது, உடல் தளர்ந்து போகும் அள[illegible] பது எல்லாம் எந்த வகையில் மாணவர்களை அறிமுகஞ் செய்தலாகும் என எங்களுக்கு விளங்கவில்லை.

'ராகிங்' உறவு நிலைமை, புரிந்துணர்வை வளர்ப்பது என்றால், இது எவ்வாறு அதனை வளர்க்க முடியும்? மனிதர்களை முதன்முதலாக சந்திக்கும் முறைமை இவ்வாறிருக்க முடியுமா? என்று நாங்கள் கேட்க விரும்புகிறோம்.

நீங்கள் எங்களுடைய வழிகாட்டிகள், தந்தையர்களும், தாய்மார்களும் கூட பிள்ளைகளின் இந்தத் துயரம் உங்களுக்குப் புரியும். குடும்பத்தில் பிள்ளைகளுக்கு இடையே தவறான கற்பிதங்களால் மோதல்கள் இருக்கும் போது எங்கள் பெற்றோர்களே பிள்ளைகளை நீங்கள் தான் இயைவுபடுத்த வேண்டும். உங்களது பிள்ளைகளில் ஒரு பகுதியினராகிய நாங்கள் எங்களின் நம்பிக்கைக்காக நோகடிக்கப்படுகிறோம். 'ராகிங்' தொடர்பாக இன்று சமூகத்தில் பெரிய அதிருப்தியிருப்பது உங்களுக்குத் தெரியும். பல்கலைக்கழக மாணவர்களாகிய எங்கள் எல்லோரையும் அவர்கள் பிழையாகப் பார்க்கத் தொடங்கி இருக்கிறார்கள். இது மிக வேதனையான விடயம். இதில் நாங்கள் செய்யக் கூடியதென்ன? எங்கள் நியாயப்பாடுகளைச் சொல்வதற்கு எங்கள் சகபாடிகள் எங்களுக்கு இடமே தருவதில்லை.

கலைவார ஆங்கில நாடகப் போட்டியன்று கூட மிக அநாகரிகமான ஒரு விடயம் நடந்தேறியது தங்களுக்கு இது வரை தெரிந்திருக்கும். வந்தோரை வரவேற்கும் பண்பாட்டில் இது எவ்வளவு கீழ்த்தரமான விடயம். கருத்து மாறுபாட்டிற்காக இரண்டு மாணவர்கள் வெளியே துரத்தப்பட்டார்கள். அவர்களின் நியாயங்களுக்கு மேலால் கேலிச்சிரிப்புகளும், வசவுகளும், இழிதகமையான வார்த்தைகளும் 'றொக்கற்று'க்களும் பறந்தன. கும்பல் மனோபாவத்தில் திசை கெட்டு கூச்சல் எழுந்தது. இரண்டு இதயங்கள் எப்படிச் செத்துப்போயிருக்கும்? அவர்களின் குற்றமென்ன? இவ்வாறு உங்கள் பிள்ளைகளில் ஒரு பகுதியினராகிய எங்களுக்கு நிலைமை இருக்கிறது. வரும் கலை வார இறுதிநாள் நிகழ்ச்சியில் கூட நீங்கள் கலந்து கொள்ளும்போது, உங்கள் பிள்ளைகளில் சிலர் வெளியே வீணுக்கு எறியப்பட்டிருப்பர்.

மாணவர்களாகிய நாங்கள் நிறையவே நோய் வாய்ப்பட்டுவிட்டோம். இந்த நோய் தீர்க்கப்பட முடியாத ஒன்றா? பண்பாட்டுப் பெறுமானங்கள் பற்றி உரத்துப் பேசும் எங்களிடம் குறைந்த பட்சப் பெறுமானங்களும் ஏன் இல்லாமல் போகின்றன?

ஒரு பொதுப்பிரச்சினையின் ஒரு புறத்து மனிதர்கள் என்ற வகையில் இந்த மோசமான எங்கள் நிலைமைகளுக்கு நீதியையும், அமைதியையும் வேண்டுகிறோம். இளையவயதில் ஏற்படும் துடிப்பின் அவசர வெளிப்பாடாக இதனை நீங்கள் நிச்சயம் கருதமாட்டீர்கள் என்று எங்களுக்குத் தெரியும். இக்கடிதம் கிணற்றில் போட்ட ஒரு கல்லாக நிச்சயமாக இருக்கமாட்டாதென நம்புகிறோம். ★

# ச. ச. நிலைய சம்மேளன வெளியீடு

கொழும்புத்துறை, மார்ச் 25

யாழ்மாவட்ட சன சமூக நிலையங்களின் சம்மேளனத்தின் வெளியீடான ''சமூகத் தொண்டன்'' பத்திரிகை மீண்டும் வெளியிடப்படவுள்ளது.

கடந்த சனியன்று யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்ற சம்மேளனத்தின் ஒன்று கூடலில் இது குறித்து தீர்மானிக்கப்பட்டது.

(ஐ-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குப் பெட்டிகளை முன் கூட்டியே ஆளுங்கட்சியினர் நிரப்பி விட்டனர்

## தம்மிடம் ஆதாரங்கள் இருப்பதாக ரணில் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 25

கடந்த வெள்ளிக்கிழமை நடந்த இலங்கை உள்ளூராட்சிச்சபைகளுக்கான தேர்தலில் திட்டமிட்டபடியே ஆளுங்கட்சியினர் வாக்குச் சாவடிகளுக்குச் சென்று வாக்குப்பெட்டிகளுக்குள் முன்கூட்டியே தங்களது வாக்குகளை நிரப்பிவைத்து விட்டார்கள்.

இதற்கான ஆதாரங்களைச் சேகரிக்கும் ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. விரைவில் நீதிமன்றத்தில் ஆளுங் கட்சியின் வெற்றிக்கு எதிராக வழக்குத் தொடரப்படும்.

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இதைத் தெரிவித்தார்.

ஆளுங்கட்சி பெரும்பான்மையான இடங்களில்வெற்றி பெற்றாலும், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பெற்றதை விட அக்கட்சி 13சதவீத வாக்குகள் குறைவாகவே பெற்றுள்ளது.

இந்த நிலைமையானது ஜனாதிபதி சந்திரிகாவின் முடிவின் தொடக்கமாகும்.

ஐ.தே.க. அடுத்த தேர்தலில் ஆட்சியைப் பிடிக்கும் என்பதற்கு அடையாளமாகும்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-3)

# 25 ஆயிரம் விசேட அ.அட்டைகள் தென்மராட்சியில் விநியோகம்

தென்மராட்சி மார்ச் 25

தென்மராட்சி பிரதேசத்தில் விசேட அடையாள அட்டைக்கு விண்ணப்பித்த 31 ஆயிரத்து 767 பேரில் 25 ஆயிரத்து 24 பேரின் விசேட அடையாள அட்டைகள் பிரதேச செயலகத்திற்கு கிடைத்து அவை அந்தந்தப் பிரிவு கிராம அலுவலர்கள் மூலம் விண்ணப்பித்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

பிரதேச செயலக அடையாள அட்டைப்பிரிவு அதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை 3 ஆயிரத்து 111 விசேட அடையாள அட்டைகள் யாழ். செயலக விசேட அடையாள அட்டைகள் பிரிவினரால் அனுப்பிவைக்கப்பட்டதாகவும் அவை கிராம அலுவலர்கள் மூலம் வழங்கப் பட்டதாகவும் தெரிவிக்கப் பட்டது. (ஐ-117)

# தென்மராட்சி ஓய்வூதியர்களுக்கு பணிக்கொடை வழங்கல் ஆரம்பம்

தென்மராட்சிப் பிரதேச ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதியப் பணிக்கொடைகள் வழங்கும் பணிகள் தென்மராட்சிப் பிரதேச செயலக ஓய்வூதியப் பிரிவினரால் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

அண்மையில் இளைப்பாறிய அரச ஊழியர்களின் ஓய்வூதியப் பணிக்கொடைகள் யாழ். செயலக கணனிப் பிரிவினரால் தயாரிக்கப்பட்டு பிரதேச செயலகத்துக்கு அனுப்பப்பட்ட படிவத்தின் பிரகாரம் இப் பணிக்கொடைக் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதாக பிரதேச செயலக ஓய்வூதியப் பிரிவினர் தெரிவித்தனர்.

இதேவேளை ஏனைய பிரதேச செயலகங்களிலிருந்து தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்கு ஓய்வூதியத்தினை மாற்றம் செய்தவர்களுக்கான ஒய்வூதியக் கொடுப்பனவுகளும் வழங்கப் படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

# சமய சந்திகளில்

திருநெல்வேலி அருள்மிகு காயாரோகண மூத்த நயினர் என்றழைக்கப்படும் தலங்காவல் பிள்ளையார் கோயில் பஞ்சகுண்ட புனராவர்த்தனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக விழாவையொட்டிய கிரியைகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகின. (ஐ-111)

★ ★ ★

கொடிகாமம் ஆத்தியடிப் பிள்ளையார் ஆலயத்தில் கணபதி ஹோமம் நாளை புதன்கிழமை பி.ப. 3.00 மணிக்கு ஆரம்பமாகி மறுநாள் வியாழக்கிழமை மாலை 5.00 மணிவரை நடைபெறும். (ஐ-117)

★ ★ ★

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயில் மண்டல பூர்த்தி நவோத்ர ஆயுத பத்தாயிரத்து ஒன்பது சங்காபிஷேகம் எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை காலை நடைபெறவுள்ளது. நாளை காலை 10 மணிக்கு அங்கு கடஸ்தாபனம், யாக பூசை, சங்கு பூசை, லட்சநாமார்ச்சனை என்பன இடம் பெறும். (ஐ-30)

# கனடா பல்கலைக்கழக ஆதரவில் புனர்வாழ்வுப் பயிற்சித் திட்டம்

## உயர் அதிகாரி விரைவில் யாழ். வருவார்

திருநெல்வேலி, மார்ச் 25

கனடா நாட்டில் உள்ள பிரித்தானிய கொலம்பியா பல்கலைக்கழகத்தின் மனித குடியிருப்பு நிலையம் 'சிடா' (C.I.D.A.)உதவித்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தில் புனர்வாழ்வு, புனரமைப்பு தொடர்பான பயிற்சித் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவுள்ளது.

மேற்படி கனேடிய பல்கலைக்கழகத்தின் அழைப்பை ஏற்று அண்மையில் அங்கு நேரில் சென்று இது தொடர்பான ஏற்பாடுகளை கவனித்து விட்டு இங்கு திரும்பி வந்துள்ள யாழ். பல்கலைக் கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை இதனை தெரிவித்தார்.

மேற்படி கனேடிய பல்கலைக்கழகம் இத்திட்டத்தின் கீழ் பேராதனைப் பல்கலைக் கழகத்திற்கு நகர திட்டமிடல் பற்றியும், றுகுணு பல்கலைக் கழகத்திற்கு கிராமிய அபிவிருத்தி பற்றியும் பயிற்சித் திட்டங்களை வழங்க திட்டமிடப் பட்டுள்ளது. இது தொடர்பான ஆரம்பகட்ட திட்டமிடல் பயிற்சியை மேற்கொள்வதற்காக திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள இங்குள்ள மூன்று பல்கலைக்கழகங்களும் ஆங்கில மொழியில் அதிஉயர் தேர்ச்சி பெற்ற கல்வியியலாளர் ஒருவரை தெரிவு செய்து அங்கு அனுப்பி வைக்க வேண்டும்.

எதிர்வரும் ஜூன், ஜூலை மாதங்களில் கனேடிய பல்கலைக் கழகத்திலிருந்து அதிகாரி ஒருவர் இங்கு வந்து இத்திட்டம் தொடர்பான செயற்பாடுகளை மதிப்பீடு செய்வார். அதனைத் தொடர்ந்து எதிர்வரும் ஒக்டோபர் மாதம் இரண்டாம் வாரத்திலிருந்து இங்கு பயிற்சித் திட்டம் ஆரம்பிக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

கனேடிய சர்வதேச அபிவிருத்தி நிலையம் சிடா இத் திட்டத்திற்கு நிதி ஆளணி, நிபுணத்துவம் ஆகியவற்றை வழங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-135)

# ப. நோ. கூ. சங்க பொதுக் கூட்டம்

தென்மராட்சி, மார்ச் 25

பளை, பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் ஏப்ரல் இரண்டாம் திகதி காலை 10.00மணிக்கு சங்கக் கூட்டுறவு மண்டபத்தில் தலைவர் சி. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும். இக்கூட்டத்தில் பிரதம விருந்தினர்களாக யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ. மு. சண்முகநாதன், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (கணக்காய்வு) திருமதி [illegible] யோர் கலந்து கொள்வர். இக் கூட்டத்தில் புதிய இயக்குநர் சபை தெரிவும் இடம் பெறும். (ஐ-117)

# விமானப்படை அதிகாரிகளின் குடும்பத்தவர் மீது விசாரணை

கடந்த 19 ஆம் திகதி எம். ஐ. 24 ரக ஹெலிக்கொப்டர் காணாமற்போனமை தொடர்பாக அனுராதபுரம் விமானப் படைத் தளத்தில் பணியாற்றும் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் ஆகியோர்களும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

ஜே.வி.பி. அமைப்பு சட்டரீதியான கட்சியாக தற்சமயம் இயங்குகின்றபோதும், ஜே. வி. பி. அமைப்புடன் இவர்கள் கொண்டுள்ள தொடர்பு குறித்தே விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்கள் என்று தெரிவிக்கப் பட்டதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது. (ஐ-3-150)

# செய்திச் சாரம்

## வன்னியில் இருந்து வந்தவர்களுக்கு உணவு முத்திரை

வலிகாமம்தெற்கு, மார்ச் 25

வன்னிப் பிரதேசத்தில் இருந்து வலிகாமம் தெற்கு பிரதேச செயலகர் பிரிவில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கான உலர் உணவு முத்திரைகள் விநியோகிக்கப் படவுள்ளன.

இவர்களுக்கான உலர் உணவு முத்திரைகள் மேற்படி பிரதேச செயலகத்தினரால் விநியோகத்திற்கென கிராம சேவையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த மீளக்குடியமர்ந்த குடும்பங்களைச் சேர்ந்தோர் தத்தம் பிரிவு கிராம சேவையாளருடன் உடனடியாகத்தொடர்பு கொண்டு தத்தமது உலர் உணவு முத்திரைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு செயலக நிர்வாக அதிகாரி தெரிவித்துள்ளார். (ஐ-152)

## பாடசாலைக்கு நிதி உதவி

கொழும்புத்துறை, மார்ச் 25

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் சேதமுற்ற முன் மதில், நுழைவாயிற் பெயர் வளைவு, வகுப்பறை மறைப்புத் தட்டிகள் போன்றவற்றைப் புனரமைப்புச் செய்து திருத்தும் பணி தற்பொழுது செய்து முடிக்கப்பட்டுள்ளது.

வர்த்தகர்களாகிய திரு. ந. பாலவிநாயகர், திரு.சி. செல்லத்துரை, இவ்வித்தியாலய ஆரம்பப் பிரிவு அதிபர் திருமதி பி. கியூ. பெனடிற் ஆகியோர் தாமாகவே முன் வந்து நிதி அளித்து இப் பணியை நிறைவேற்றியுள்ளனர். (ஐ-30)

## 3 கிலோ சீனி விநியோகம்

உரும்பிராய், மார்ச் 25

நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் குடும்பம் ஒன்றுக்கு 3 கிலோ வீதம் பங்கீட்டுக்கு சீனி வழங்கப்படுகிறது.

சீனியின் விலை கிலோ 32 ரூபா ஆகும். (ஐ-154)

## ஆஸ்பத்திரியில் நாய்களால் தொல்லை

பருத்தித்துறை, மார்ச் 25

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது. வார்ட்டுக்களில் உள்ள நோயாளிகளுக்கும் ஊழியர்களுக்கும் இதனால் தொல்லைகள் ஏற்பட்டுள்ளன.

மூன்று பிரதேச சபை ஊழியர்கள் முன்னர் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழித்து வந்தனர். இவ்வருடம் பிரதேச சபைக்கு கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிப்பதற்கான நிதி இதுவரை வழங்கப்படவில்லை எனத் தெரிய வந்தது. (ஐ-118)

## இருக்கைகள் இன்றி பயணிகள் அவதி

யாழ்ப்பாணம், மார்ச் 25

சாவகச்சேரி பஸ் நிலையத்தில் பயணிகள் தங்குவதற்கான இருக்கைகள் கொண்ட கட்டடவசதி இல்லாததால் பஸ் நிலையத்திற்கு வரும் பயணிகள் பஸ் வரும் வரை கால்கடுக்க நிற்க வேண்டியுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள ஏனைய பஸ் நிலையங்களில் உள்ளது போன்று சாவகச்சேரி பஸ் நிலையத்தில் இருக்கைகள் கொண்ட கட்டடம் அமைக்க வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பயணிகள் தெரிவித்தனர். (ஐ)

## பாலர் பாடசாலைக்கு தளபாடங்கள்

வடமராட்சி, மார்ச் 25

பருத்தித்துறை நகரசபைப் பகுதியில் உள்ள மூன்று பாலர் பாடசாலைகளுக்கு தளபாடங்கள் பருத்தித்துறை நகரசபையால் வழங்கப்பட்டன.

சனசமூக நிலையங்களால் நடத்தப்படும் ஆத்தியடி, மாதனை, தும்பளை ஆகிய இடங்களில் உள்ள பாலர் பாடசாலைகளுக்கே இத்தளபாடங்கள் வழங்கப்பட்டன. (ஐ-173)

## நூலகங்களில் இரவல் வழங்குதல் மீண்டும் ஆரம்பம்

வலிகாமம் தெற்கு, மார்ச் 25

வலிகாமம் தெற்கு சுன்னாகம் பிரதேச சபையின் கீழ் இயங்கும் சுன்னாகம், உடுவில் நூலகங்கள் தங்களது அங்கத்தவர்களுக்கு நூல்களை இரவலாக வழங்கும் பணியினை மீண்டும் ஆரம்பித்துள்ளன.

ஏற்கனவே இந் நூலகங்களில் நூல்களை இரவலாகப் பெற்றுத் திரும்ப ஒப்படைக்காதவர்கள் அவற்றை மீண்டும் உரிய நூலகங்களில் கையளித்து பணியினை தொடர உதவுமாறு வலிகாமம்தெதற்குபிரதேச சபையின் விசேட ஆணையாளர் திரு. ஆ. மகாலிங்கம் அறிவித்துள்ளார்.

தாமதத்துக்கான அறவீகள் எதுவும் செய்யப்படடு மாட்டாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ-152)

## ஆரம்பக்கல்விக் கண்காட்சி

வலிகாமம்தெற்கு, மார்ச் 25

ஆரம்பக்கல்வி பயிலும் மாணவர்கள் பயனடையக் கூடிய ஆரம்பக்கல்வி கற்பித்தல் கண்காட்சி இன்று செவ்வாய் காலை சங்கானைக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

சங்கானைக் கோட்ட ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர், பாடசாலை அதிபர், ஆசிரியர்களுடன் இணைந்து ஒழுங்குபடுத்தியுள்ள இக்கண்காட்சியில் ஆண்டு ரீதியாக பாட அலகுகளுக்குப் பொருத்தமான கட்புல, செவிப்புல சாதனங்கள் காட்சிக்கு வைக்கப்பட உள்ளன.

பாடசாலை மட்டத்தில் இம்மாதம் 17ஆம், 18ஆம் திகதிகளில் நடத்தப்பட்ட கண்காட்சிகளில் இருந்து இக் காட்சிப் பொருள்கள் தெரிவு செய்யப்பட்டன. (ஐ-152)

## புத்தாண்டை ஒட்டி விளையாட்டு விழா

பருத்தித்துறை, மார்ச் 25

புலோலி தெற்கு சந்தா தோட்டம் சனசமூக நிலையத்தின் ஆதரவில் எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று விளையாட்டு விழா நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட மட்டத்தில் சைக்கிள் ஓட்டப் போட்டி மரதன் ஓட்டப் போட்டி என்பன நடைபெறவுள்ளன. இதில் பங்குபற்ற விரும்புபவர்கள் நிலைய செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு செயலாளர் தெரிவித்தார். (ஐ-118)

## அன்பளிப்பு

குருநகர், மார்ச் 25

யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றை கல்லூரிக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது. (ஐ-51)

## நெடுந்தீவில் மாவுக்கு தட்டுப்பாடு

நெடுந்தீவு, மார்ச் 25

நெடுந்தீவில் மாவிற்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கடைகளில் மாவினை வாங்கமுடியாது பொதுமக்கள் அவதிப்படுகின்றனர். (ஐ-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் ... நூலகம்

‘கொங்கிறீட்’ தூண்கள் தயாரிக்க

# உரும்பிராயில் தொழிற்சாலை; அடுத்த மாதம் முதல் இயங்கும்

சிமெந்துக் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கவுள்ள. ‘‘கொங்கிறீட்’’ தூண் தயாரிக்கும் தொழிற்சாலை அடுத்தமாதம் முதல் உரும்பிராயில் செயற்பட ஆரம்பிக்கவிருக்கிறது.

இந்தத் தொழிற்சாலைக்கான உபகரணங்கள் மற்றும் தேவையான பொருள்களை கப்பல் மூலம் எடுத்துவர சிமெந்துக் கூட்டுதாபனத்துக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

குடாநாட்டில் நிலவும் ‘‘கொங்கிறீட்’’ தூண்களுக்கான தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யவும் —

வேலையின்றி உள்ள சிமெந்து தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கவும் இத் தொழிற்சாலை ஆரம்பிக்கப் படுவதாக சிமெந்துக் கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-3)

# மானிப்பாயில் காணாமற்போன மாணவன் பற்றி தகவல் இல்லை

## செஞ்சிலுவைக் குழுவிடம் புகார்

மானிப்பாய் பகுதியில் கடந்த டிசம்பர் மாதம் 25 ஆம் திகதி காணாமற்போன மகாஜனக் கல்லூரி மாணவனான துரைராசா தசிஜீபன் (வயது 18) என்பவரைப் பற்றி இதுவரை தகவல் எதுவும் தெரியவில்லை என்று பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவுக்கும் முறையிட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

அளவெட்டி வடக்கில் இருந்து இடம் பெயர்ந்து சுதுமலையில் வசித்த இவர் கடந்த டிசம்பர் 25 ஆம் திகதி ஆஸ்பத்திரிக்குச் சிகிச்சை பெறச் சென்ற வழியில் மானிப்பாயில் காணாமற் போனார் என்றும் —

பின்னர் டிசம்பர் 26 ஆம் 27 ஆம் திகதிகளிலும், ஜனவரி 11 ஆம் திகதியுமாக மூன்று தடவைகள் அவரை இராணுவத்தினர் மோட்டார் சைக்கிளில் அவரது வீட்டுக்கு அழைத்து வந்து வீட்டைச் சோதனையிட்ட பின்னர் மீண்டும் தம்முடன் அழைத்துச் சென்றனர் என்றும் அவரது பெற்றோர் தெரிவித்தனர்.

அதன் பின்னர் சில முகாம்களுக்குச் சென்று அவரைப் பற்றி விசாரித்தபோது அவரைப் பற்றி எந்த வித தகவலும் தெரிவிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவரான இவர் ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிவிட்டு பெறுபேறுகளை எதிர்பார்த்து காத்திருந்தார்.

## போலியான தலைமயிர் சாயம் விற்பனை

தலைமுடியைக் கருமையாக்குவதற்குப் பயன்படுத்தப்படும் வெளிநாட்டுச் சாய வகைகளை ஒத்த போலியான சாய வகைகள் விற்பனைக்கு வந்துள்ளதாகப் பாவனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜப்பானில் உற்பத்தியாகும் சாய வகை ஒன்றின் பெயரிலேயே போலியானவை விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஆயுள்வேத நிலையம்

தென்மராட்சி, மார்ச் 25

பளை பிரதேச சபையினால் முகமாலையில் ஆயுள் வேத வைத்திய நிலையம் ஒன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

இவ் வைத்திய நிலையத்தில் தினமும் சிகிச்சையளிக்கப்படுவதாக தெரிவிக்கப் பட்டது. (ஐ-117)

## பரிசுத்த வாரம்

(2 ஆம் நாள் செவ்வாய்)

‘‘உண்மையிலும் உண்மையாகச் சொல்லுகிறேன். உங்களுள் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான்’’

(அரு. 13: 21-33, 36, 38.)

அன்று கலக்கத்தோடு இயேசு கூறிய வார்த்தைகள். இவை. காட்டிக் கொடுப்பவன் யாராக இருக்கும்? அந்த ஒருவன் யார்? எம்மில் எவருமே இல்லை என்று துணிந்து சொல்ல நீ தயாரா? அப்பழுக்கற்ற மனநிலையில் துணிந்து கூறுவதற்கு ஏன் முடியவில்லை? ஒரு கணம் மனதைக் கேட்டுப்பார். சிந்தித்த காலம், சீர்திருத்த வேண்டிய காலம், எத்தனை முறை எமக்கு தரப்பட்டும் நாம் அதனைப் பயன்படுத்திக் கொள்ள தவறியதை உணர்ந்தாயா? உன் சோதனைக் காலம் எல்லாம், சினம் கொண்டு, நீ இடறல் பட்டு வெறுத்து காட்டிக் கொடுக்க முனையவில்லையா?

ஊர் உன்னை உயர்ந்தவன் என்றாலும் உன் மனதில் எண்ணிய காட்டிக் கொடுப்புகளை உன் மனச்சாட்சிதான் கூறும். உடல் உடைகளால் மறைக்கப்பட்ட போதும், மனம் களங்கப்பட்டு அழுக்குடன் இருப்பதை ஏற்று, உணர்ந்தால் தானே எதனையும் களைய முடியும், பரிசுத்தப்படுத்த முடியும்,

இப்பரிசுத்த வாரத்தில் உள்ளதைப் பரிசுத்தப்படுத்த உருக்கமுடன் சிந்திப்போமா?

— யோசப் பாலா

# குருநகர் றெக்கிளமேசன் பகுதியில் குடிதண்ணீர் பெறுவதில் சிரமம்

நாளாந்தம் தமது பாவனைக்குத் தேவையான குடிதண்ணீரைப் பெறுவதற்குக் குருநகர் றெக்கிளமேசன் பகுதியில் வாழும் மக்கள் மிகுந்த சிரமத்தை அனுபவித்து வருவதைத் தற்போது அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

இப்பகுதியில் பெருமளவு மக்கள் குடியேறி வாழ்ந்து வருகின்றபோதிலும் இம்மக்கள் குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் இருந்து குழாய் மூலம்விநியோகிக்கப் படும் நீரைப் பெற்றுக் கொள்ள றெக்கிளமேசன் மத்திய கிழக்கு வீதியில் யாழ். மாநகர சபையினால் இரு பைப்புகள் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளன. அதிலும் ஒரு பைப் விஷமிகளால் சேதமாக்கப்பட்டுள்ளது.

றெக்களமேசன் சனசமூக நிலையத்தின் அருகாமையில் உள்ள பைப் மூலம் மட்டுமே தற்போது நீர் காலையிலும் மாலையிலும் மட்டுப்படுத்தப்பட்ட நேரத்தில் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இந்நீரைப் பெற்றுக் கொள்ள மக்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டி உள்ளது. (ஐ-51)

# கப்பல் பயண அனுமதியில் வடமராட்சி மக்கள் புறக்கணிப்பா?

யாழ்ப்பாண மாவட்டத்தை பொறுத்தவரையில் மக்களின் அத்தியாவசிய தேவைகளில் ஒன்று கப்பல் பயணம். நோயாளர்கள், உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், சாதாரண மக்கள், அனைவரினதும் அத்தியாவசிய போக்குவரத்து ஊடகம் தற்பொழுது கப்பலாகும்.

தங்கள் பத்திரிகை ஊடாகவும், யாழ்ப்பாண ஒலிபரப்புசேவை ஊடாகவும் அன்றாடம் கப்பல் பயணம் பற்றி அறிவித்தல்கள் வெளிவருகின்றன. ஆனால் வடமராட்சியை பொறுத்தவரையில் 40 தொடக்கம் 60 பயணிகள் வரையே அதுவும் சில நாள்களில் மட்டும் அனுமதிக்கப்படுகிறார்கள். ஏனையவர்கள் ஏமாற்றத்துடன் திரும்புகிறார்கள். அண்மையில் வெளியான ஓர் அறிவிப்பில் 790 பயணிகள் செல்ல கப்பல் வசதி செய்யப்பட்டுள்ளது என்று கூறப்பட்டது. ஆனால் அந்தக் கப்பல் பயணத்துக்காக வடமராட்சியில் அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 30 மாத்திரமே. ஏனைய 760 பயணிகளும் எங்கிருந்து அனுமதிக்கப்பட்டனர்? அது அவ்வாறு இருக்க நான் கப்பல் பயணத்துக்காக அனுமதி பெற பருத்தித்துறையில் உள்ள சிவில் இராணுவ அதிகாரியின் அலுவலகம் சென்றிருந்தேன். அந்த சமயத்தில் அங்கிருந்த பொது மக்களை அணுகிய நபர் ஒருவர் 2000/- ரூபா பணம் தந்தால் உங்களை அடுத்த கப்பலில் அனுப்பி வைக்கிறேன் என்று பேரம் பேசினார்.

இது அவ்வாறு இருக்க —

## போசகர் திருமுகம்

என் முன்னால் ஒரு நடுத்தர வயதுடைய ஒரு பொதுமகன் அடிவயிற்றுப் பகுதியில் அறுவைச்சிகிச்சை செய்வதற்கான கொழும்பு பெரியாஸ்பத்திரி வைத்திய சான்றிதழுடன் கிளினிக் செல்வதற்கான அனுமதி பெறவந்து சிவில் அதிகாரியை சந்தித்து கதைத்தார். சிவில் அதிகாரியோ அடுத்த கப்பலில் அனுப்பிவைக்கிறேன் பிரதேச செயலர் அலுவலகத்தில் கப்பல் அனுமதி இலக்கம் ஒட்டப்பட்டிருக்கும் அங்கு சென்று பார்க்கும்படி பதில் கூறி அனுப்பினார். ஆனால் அந்த பொதுமகன் இதுவரை அனுமதி பெறவில்லை. அவரது கிளினிக் திகதியும் பின்னர் முடிவடைந்தது. அந்த நபர் நோயால் மிகவும் அவதிப் பட்டுக் கொண்டிருந்தார்.

இதேசமயம் வடமராட்சி கிழக்கு மக்களும் பருத்தித்துறை சிவில் அதிகாரியிடமே அனுமதி பெறவேண்டும். இந்தமக்கள் பல தடைகளை கடந்துதான் இங்குவரவேண்டும். வந்து கதைத்தாலும் அவர்கள் சாக்குப் போக்கு சொல்லி அனுப்புகிறார்கள். அடுத்த கப்பலில் அனுப்புகிறேன் என்று சொல்லி நாளை கப்பல் இலக்கத்தை பார்க்கவும் என்று கூறிவிடுவார்கள். இந்த மக்கள் சுமார் 10 — 15 கிலோ மீற்றர் பயணம் செய்து வந்து இலக்கத்தைப் பார்த்தால் ஏமாற்றமே காத்திருக்கும்.

இப்படி பல மக்கள் கஸ்ரப்படும்போது கையூட்டு வாங்கி செயற்படும் நபர்கள் மக்களின் தேவைகளை உணர்ந்து இப்படியான செயல்களில் இருந்து விடுபட்டு பொறுப்புணர்வுடன் செயற்படுமாறு கேட்பதோடு உரிய அரச அதிகாரிகள் இதில் கவனம் எடுத்து செயற்படுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

செ. மணிவாசகன்
(பல்கலைக்கழக மாணவன்)
சாமியன் அரசடி,
கரவெட்டி.

# மனம் என்பது இதயமல்ல; அது மூளையின் ஒருபகுதியின் செயற்பாடு

## ஓவியப் போட்டி பரிசளிப்பு விழாவில் நந்தி

யாழ்ப்பாணம், மார்ச் 25

மனம் வேறு; இதயம்வேறு. மனிதனின் உணர்வுகளின் இருப்பிடம் மனம் தான். உண்மையில் அது மூளையின் ஒரு பகுதி. மூளை நரம்புகளின் செற்பாடுகள் உணர்வுகளை உண்டாக்குகின்றன. ஆனால் இதயமோ இரத்தத்தைச் செலுத்தும் தொழிற்பாட்டை மட்டுமே செய்கிறது.

ஆனால் இன்னமும் நாம், ‘இதயத்தில் எழுந்த கவலையை’, ‘இதய அஞ்சலி’, ‘இதயம் நெகிழ்ந்த’ என்ற பதங்களையே தொடர்ந்து பயன் படுத்துகிறோம்.

இவ்வாறு பேராசிரியர் செ. சிவஞான சுந்தரம் (நந்தி) தெரிவித்தார்.

உலக உளநல நாளையொட்டி உதயன் ஆதரவுடன் சாந்திகத்தினால் நடத்தப்பட்ட ஓவியப் படைப்பாக்கக் களத்தில் பங்குபற்றி வெற்றியீட்டிய களைஞர்களைக் கௌரவிக்கும் விழா அண்மையில் நடைபெற்றது.

சாந்திகம் மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவுக்கு வைத்திய கலாநிதி செ. சு. நச்சினார்க்கினியன் தலைமை வகித்தார்.

இவ் விழாவில் ‘‘மனதின் வியாபகம்’’ என்னும் பொருளில் பேராசிரியர் சிவஞான சுந்தரம் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

மூளையின் செயற்பாடு இக் காலத்துக்குக் கணனிகளின் செயற்பாட்டைவிட பல மடங்கு விந்தையானது. மனிதனின் மன உணர்வுகள் மற்றும் உணர்ச்சிகள் மூளையில் நுண்ணிய செயற்பாடுகளாலேயே உருவாகின்றன.—

மனக் கவலை, மனத்தாக்கம் முதல் ஆன்மா வரை மூளையின் பல்வேறு வகைப்பட்ட செயற்பாடுகள் பல வடிவங்களில் வியாபித்து நிற்கின்றன — என்றும் பேராசிரியர் நந்தி விளக்கினார்.

ஓவியக் கலையை ஊக்குவிக்கும் வகையில் இப்போட்டியில் தெரிவு. செய்யப்பட்டிருக்கும் ஓவியங்களை வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் கண்காட்சிக்கு வைக்க வேண்டும் என்றும் பேராசிரியர் கருத்துத் தெரிவித்தார்.

போட்டிக்குக் கிடைத்த ஓவியங்கள் குறித்து ஓவியர் றமணி மதிப்பீட்டுரை நிகழ்த்தினார்.

குடாநாட்டு ஓவியர்களின் படைப்புக்களைக் காட்சிக்கு வைப்பதற்கு யாழ்ப்பாணத்தில் காட்சியகம் ஒன்று திறக்கப்பட வேண்டும் என்று அவர் சொன்னார்.

போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு மூத்த ஓவியர் ‘‘ஆர்டிஸ்ட் மணியம்’’ பரிசில்களையும் அத்தாட்சிப் பத்திரங்களையும் வழங்கி அவர்களைக் கௌரவித்தார்.

நல்லூர் வைமன் வீதியைச் சேர்ந்த செல்வி. நி. துசிந்தா ஐயாயிரம் ரூபா ரொக்கப் பணத்தையும் சான்றிதழையும் பெற்றுக் கொண்டார்.

சுண்டுக்குளியைச் சேர்ந்த க. இராசையாவின் சார்பில் அவரது துணைவியார் மூவாயிரம் ரூபா ரொக்கப் பணத்தையும் சான்றிதழையும் பெற்றுக் கொண்டார்.

யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம் ஆங்கிலப் பாடசாலையைச் சேர்ந்த வின்சென்ற் அனேற் றஜனி இரண்டாயிரம் ரூபா ரொக்கப் பணத்தையும் சான்றிதழையும் பெற்றுக் கொண்டார்.

சிறந்த ஓவியங்களைப் படைத்த பின்வருவோர் சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டனர்:

1) சுதர்சினி செல்லப்பா. புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம்.

2) சுகிர்தா தெய்வேந்திரம், 670, கண்டி வீதி, அரியாலை.

3) எஸ். டியான்சி மிறாண்டா, 5 ஆம் குறுக்கு வீதி, குருநகர்.

4) கே. ரட்னேஸ்வரன், ஆசிரியை, மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.

4) கே. நிமலதாஸ், நாவலம்பதி, அச்சுவேலி.

6) சிங்கம் நேசலிங்கம், இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி.

7) யசோதரா சின்னத்தம்பி, 11, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.

8) எஸ். சண்முகராஜா 19, பண்டாரங்குளம், ஒழுங்கை, நல்லூர்.

9) சுகந்தி சின்னத்தம்பி, ஆண்டு - 13 A, வேம்படி மகளிர் கல்லூரி.

(அ-5)

# தென்மராட்சிக்கு மின் வழங்க ஜெனரேற்றர் கிடைக்குமா?

பிரிட்டிஷ் அரசு வழங்கவிருக்கும் ஐந்து ஜெனரேற்றர்களில் ஒன்று (சாவகச்சேரிக்கு) தென்மராட்சிக்கு வழங்க இருப்பதாகச் சில மாதங்களுக்கு முன் பத்திரிகை வாயிலாக அறிந்தோம். அல்லாமலும் சாவகச்சேரி நகரசபை அதிகாரிகளும் இதனை ஊர்ஜிதப்படுத்தியிருந்தனர்.

14-03-1997 உதயன் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில் பிரிட்டனிலிருந்து ஐந்து ஜெனரேற்றர்களும் கொழும்புக்கு வந்துவிட்டதாகவும் அவை இங்கு வந்து சேர்ந்ததும் இரண்டு வடமராட்சிக்கும் மற்றவை முறையே திருநெல்வேலி, யாழ். இந்துக்கல்லூரி, நல்லூர் கிட்டு பூங்காவிற்கும் பொருத்தப்படும் என அறிவிக்கப்பட்டதையும் அறிய முடிகிறது. ஆனால் தென்மராட்சி புறக்கணிக்கப்பட்டுள்ளது.

நகரசபை ஒரு சிறிய ஜெனரேற்றரை வைத்துக் கொண்டு ஒரு மைல் சுற்றாடலுக்கு மட்டுமே மின்சாரத்தை வழங்குகிறது. சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் மின்சாரம் வழங்க இன்னொரு ஜெனரேற்றர் மிக மிக அத்தியாவசியம்.

ஆகவே இந்த ஐந்தில் ஒன்றை தென்மராட்சிக்கு வழங்க வடபகுதி புனரமைப்பு அதிகாரசபையும் தலைவர் டக்ளஸ் தேவானந்தா அவர்களும் நடவடிக்கை எடுப்பார்களா?

அ. மார்க்கண்டு
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

National TV (20'') வீடியோ டெக் (G 120), ஜெனரேட்டர்கள் யமகா (650w), Robin (1500w), Solar (40w), Stabiliser (1 KVA) விற்பனைக்குண்டு. ம. சுரேந்திரஜித், 183, சென்ஜேம்ஸ் ஒழுங்கை, யாழ்ப்பாணம் (தற்போதைய நீதிமன்ற முன்ஒழுங்கை).
[45959]

இந்தியன் 10 H.P. என்ஜின், 20 அங். சொனி T.V குழந்தைகளுக்கான தொட்டில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஸ்ரீதாமோதரராசா, யாழ். ரெச்ஸ், வட்டு கிழக்கு, சித்தன்கேணி.
(45973)

### மணப்பெண் தேவை

ஜேர்மனியில் வேலைபார்க்கும், 36 வயது ஆணுக்கு (மொத்த பாவம் 12, அச்சுவினி) அழகிய மணமகள் தேவை. க.திருஞானசம்பந்த சர்மா, ஸ்ரீ முருகன் சோதிட நிலையம் நல்லூர் வடக்கு வீதி. [45966]

### மணப்பெண்கள் தேவை

63 ஆம் ஆண்டு மிருகசீடம் 3, பாவம் 27, 33 வயது, பூசம், செவ்வாய் 1 இல் 27 பாவமுடைய ஆசிரியர்களுக்கு உத்தியோக மணப்பெண்கள்தேவை. க. ஸ்ரீ ஞானசம்பந்த சர்மா, திருமுருகன் சோதிடநிலையம், நல்லூர் வடக்கு வீதி.
[45965]

### நாடகம் எழுதுவது?

எல்லோரும் நாடகங்கள் பற்றி அறிய வேண்டும் என்பதற்காகவே அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை இந்த நூலை எழுதினார் 50 ரூபாவுடன் நாடகங்கள் பற்றிய பல விடயங்களை அறியலாம். பூபாலசிங்கம் புத்தகசாலை. [45962]

### தமிழ் தட்டெழுத்து

தமிழ் றெமிங்ரன் தட்டெழுத்து இயந்திரம் விற்பனைக்குண்டு. தேவைப்படுவோர், 31 - 03 - 97 ஆம் திகதிக்கு முன் அலுவலகத்தில்பார்வையிட்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ளவும். பொது முகாமையாளர், யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம். [சி/362]

### தவறிவிட்டன

சிவசுப்பிரமணியம் ஜீவராஜ் ஆகிய எனது இல. 713201588V தேசிய அடையாள அட்டையும் இல. B/2055 இராணுவ அனுமதி அட்டையும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ். பிரதம தபாற் கந்தோரில் தயவு செய்து ஒப்படைக்கவும். [45970]

## ஸ்தாபகர் தினமும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், மார்ச் 25
மானிப்பாய் சென். ஆன்ஸ் றோ. க. த. க வித்தியாலய ''ஸ்தாபகர்'' நினைவும், பரிசளிப்பு விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு அதிபர் அருட் சகோதரி மேரி நிசற்றா தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்ட பிரதிக். கல்விப் பணிப்பாளர் திருமதி ஜெ. இருதயநாதன் கலந்து சிறப்பிப்பார்.
(ஐ)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 07 | 23 |
| 12 | 02 |
| 1926 | 1997 |

### திருமதி
### பாக்கியலட்சுமி திருவிளங்கம்

(இளைப்பாறிய தாதி,
Mcleod வைத்தியசாலை, இணுவில்)

சாஸ்திரியார் ஒழுங்கை, தும்பளை பருத்தித்துறையில் நடைபெற்ற அன்னாரின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றியும், வேறு விதங்களிலும் எமது துயரில் பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

**குடும்பத்தினர்**

சாஸ்திரியார் ஒழுங்கை,
தும்பளை, பருத்தித்துறை. (45968)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் முத்து நடராஜா

தோற்றம்: 14 — 02 — 1936 மறைவு: 23 — 02 — 1997

என் இனிய நாயகனே,
உன் பூவுடலின் கொடிய வினை அகற்றி, என் பூவும் பொட்டும் நிலைக்க வைக்க, நான்கு திங்கள் போராடித் தோற்றேனே...

பாசமிகு அப்பாவே,

- உங்களைக் குணப்படுத்த அலைந்து திரிந்தும் எல்லாம் வீணானதே அப்பா
- உங்களைப் பார்க்க முடியாத பாவியாக பூதவுடலைக் காண வந்தேனே அப்பா,
- தொலைபேசியில் செய்தி கேட்டுத் துடித்தேனே அப்பா,
- செய்தி உடனறிய முடியாது உங்களைக் கடிதத்தில் சுகம் கேட்டேனே அப்பா,
- வந்ததும் உங்கள் பூவுடலைக் காண முடியாத பாவியானேனே அப்பா,
- பூவுடலைக் காண ஓடோடி வந்து அதையும் இழந்தேனே மாமா,
- உங்கள் நாமம் அறியேனே அப்பப்பா,

உங்கள் நினைவுகள் என்றும் நெஞ்சை விட்டு நீங்குமோ,

இன்று நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகள் மற்றும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

[illegible]

கலட்டி,
வல்வெட்டி, வல்வெட்டித்துறை. (45958)

## கசிப்பு உற்பத்தியாளர்களால் 'ஈஸ்ட்' விலை அதிகரிப்பு

யாழ்ப்பாணம்.மார்ச் 25
வெதுப்பகங்களுக்கு பாண் தயாரிக்கப் பயன்படுத்தப் படும்'ஈஸ்ட்'விலை அதிகரித்து வருகிறது.

கொழும்பிலிருந்து வரும் ஈஸ்ட், கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுவதால், வியாபாரிகள் இதனை அதிக விலைக்கு விற்பதாகக் கூறப்படுகிறது.

கசிப்பு உற்பத்தியாளரும் இதனை அதிக விலைக்கு வாங்குகின்றனர். (இ-173)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி அதிபர்
**திரு. செ. நேசவராஜன்** அவர்களின்
பாசமிகு மாமியார்
### திருமதி
### வைரரத்தினம் விநாயகமூர்த்தி

அவர்கள் 21-03-1997 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

**ஆசிரியர் கழகம்,**
**மானிப்பாய் இந்துக் கல்லூரி,**
மானிப்பாய்.
(9432)


## வியாபாரிகளுக்கு அரிய வாய்ப்பு
### விற்றுத் தீர்க்கும்
## மலிவு விலைக்கு


எவர்சில்வர் திருவாசிகள், பெரிய சிறிய மணிகள், பெரிய சிறிய குத்து விளக்குகள், பஞ்சாலாத்திகள், கற்பூரத்தட்டு, வீபூதிமடல், சோடச உபசார செட்கள், பஞ்சதீபம், வில்வதீபம், பஞ்சமணி, கைமணி, அசையாமணி, பட்டுக்குடைகள், பரிவட்டக் குடைகள் பெரிய சிறிய தாம்பாளங்கள், பித்தளை-செப்புக் கிடாரங்கள், கோயில் கதவு மணிகள் தூபிகள், தூக்கு விளக்கு, சரவிளக்கு இன்னும் பல எவர் சில்வர் றே பிளேட்ஸ், ஐஸ்கிறீம்கப்ஸ், கறிடிஷ்கள், தூக்கு சட்டி, வாட்டர்யக், ரீயக் இன்னும் பல விற்பனைக்குண்டு.

## பிள்ளையார்

| முன்னைய முகவரி: | தற்போதைய முகவரி: |
|---|---|
| 251, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். | 07, கைலாச பிள்ளையார் கோயில் பின் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். |

(45974)


## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 1918 | 1994 |
| 01 | 03 |
| 4 | 28 |

### சின்னப்பு குணரத்தினம்

''அன்பாலும் பாசத்தினாலும்'' மனதில்
களங்கமில்லா கனிவுறும்
சொற்களாலும் வழி நடத்திய அன்புத் தெய்வமே!
நீங்கள் எம்மை பிரிந்து ஆண்டு மூன்று ஆனாலும்
நீங்காது என்றும் உங்கள் நினைவு.

உங்கள் பிரிவால் துயருறும்:

மனைவி கு. பொன்னம்மா
பிள்ளைகள்:- கு. நவரத்தினராஜா - லோஜினி
(யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை)
ராஜேஸ்வரி - சுந்தரலிங்கம்
(செல்வம் பற்றிசார்ஜ் உரிமையாளர்)
செல்வி கு. ரஞ்சிதா,
கு. நடராஜா - யசோதரா
(ஆஸ்திரேலியா)
பேரப்பிள்ளைகள்:- ந. தர்சினி (கொழும்பு),
சு. சுஜன்
ந. நிராஜா, (ஆஸ்திரேலியா)

மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை. (9428)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போசாக்குப் புனர்வாழ்வு

யாழ்ப்பாண நகரத்தில் போசாக்குப் புனர்வாழ்வு நிலையங்கள் நான்கு அமைக்கப்பட உள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் சுகாதார வைத்தியப் பிரிவினர் இலங்கைக் கிறிஸ்தவ சங்கங்களின் ஒன்றியத்துடன் இணைந்து இந்தப் போசாக்கு நிலையங்களை இயக்கவுள்ளனர்.

குடாநாட்டின் எதிர்காலப் பிரசைகளின் உடல் நலனைக் கருத்திற் கொண்டு, தூரநோக்குடன் தொடங்கப்படும் இம்முயற்சி நற்பயனைத் தரவேண்டும் என்பதே எமது விருப்பமாகும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில், போரின் காரணமாக உணவுப் பொருள்களுக்குத் தொடர்ச்சியாகப் பெரும் பற்றாக்குறை — தட்டுப்பாடு — நிலவியது. மிகக் குறிப்பாக பொருளாதாரத் தடை விதிக்கப்பட்ட பின்னர் பணவசதி உள்ளவர்களால் கூடத் தமது பிள்ளைகளுக்குப்போசாக்கு உணவை வழங்க முடியவில்லை,

அப்படியிருக்க தொழில் இழந்து, வருமானம் இன்றி, அன்றாடம் ஒரு நேர உணவுக்கு வழியின்றித் தவித்த, வசதி குறைந்த பெற்றோரின் பிள்ளைகள் போசாக்குள்ள உணவை எப்படிக் கண்டிருக்க முடியும்?

போசாக்கின்மை வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களை மட்டுமன்றி மத்திய தர வகுப்புப் பிள்ளைகளையும் பாதித்தது.

எனவே போசாக்கின்மையைப் போக்கும் விடயம் மிகவும் அக்கறையுடனும் நீண்ட கால நோக்குடனும் நீண்ட காலத் திட்டத்துடனும் செயற்படுத்தப்பட வேண்டிய ஒன்றாகும். எழுந்தமானமாகவோ, குறுகிய காலத் திட்டத்தின் கீழோ அணுகப்படக் கூடாது.

போசாக்கின்மையினால் இரத்தச் சோகை போன்ற ஆபத்தான நோய்கள், குழந்தைகள், பள்ளிச் சிறார்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்களைத் தாக்கும்.

எனவே போசாக்கின்மை உடற் பாதிப்பை மட்டுமன்றி, நீண்ட காலப் பாதிப்பையும் பல சமூகத் தாக்கங்களையும் உருவாக்கும். உரிய காலத்தில் அது தடுக்கப்படாவிட்டால் பல குடும்பங்களின் வாழ்க்கையைச் சீரழித்துச் சிதறடித்து விடும்.

எனவே தொண்டர் நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் போசாக்கின்மைத் தடுப்பை கையாளட்டும் என்று அரசு பார்த்திருக்கக் கூடாது. தமிழர் நலன்களில் அரசுக்கு அக்கறை இருந்தால் அது உடனடியாக குடாநாட்டின் எல்லாப் பகுதிகளிலும் போசாக்கு வள நிலையங்களை தானே பொறுப்பு நின்று உருவாக்கவேண்டும். உட்கட்டுமானப் புனர் நிர்மாணத்தை விட, எதிர்காலப் பிரசைகளின் உயிரைக் காப்பாற்றும் போசாக்குப் புனர் வாழ்வுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

தொண்டர் நிறுவனங்களின் பணி அரசுக்குத் துணையாக நின்று சேவையாற்றுவதாக அமையலாம். அரசு தனது பொறுப்பைத் தட்டிக்கழித்து குசலம் விசாரிப்பதோடு நின்று விடலாகாது.

# 8 ஆம் ஆண்டிலும் புதிதாக புலமைப் பரிசில் பரீட்சை

## கல்விக் கொள்கை அறிக்கையில் சிபார்சு

கொழும்பு, மார்ச் 25

மாணவர்கள் இரண்டு வகுப்புகளில் புலமைப் பரிசில் பரீட்சைகளுக்குத் தோற்று வதற்கு வசதி செய்யும் புதிய திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும் என்று அரசாங்கத்துக்குச் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

நடைமுறையில் உள்ள 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையோடு எட்டாம் ஆண்டிலும் மற்றொரு புலமைப் பரிசில் பரீட்சை நடத்துவதே அந்தத் திட்டமாகும்.

அண்மையில், தேசிய கல்வி ஆணைக்குழுவால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட தேசிய கல்விக்கொள்கையில் இது தொடர்பான சிபார்சுகள் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் திறமையைக் காட்ட முடியாமல் போன மாணவர்கள் 8 ஆம் ஆண்டில் திறமையினை வெளிக்காட்ட முடியும்.

புதிய புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் குறித்த நிபந்தனைக்கு உட்பட்ட குறைந்த பொருளாதார வசதியுடைய மாணவர்களுக்கு ஆண்டு 5 இல் சித்தியடைந்தால், வழங்கப்படுவது போன்று புலமைப்பரிசில் நிதி உதவி வழங்கப்படும்.

இந்த சிபார்சுகள் அடங்கிய புதிய தேசிய கல்விக் கொள்கை அங்கீகரிக்கப்படுமானால், நடைமுறைக்கு வரவுள்ள மேற்படி 8 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை தொடர்பாக தேசிய கல்வி நிறுவகத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் தகவல்தருகையில் மேலும் தெரிவித்ததாவது;

விவேகமும் திறமையும் உள்ள பொருளாதார வசதி குறைந்த மாணவர்களுக்கு பல்கலைக்கழகம் செல்லும் வரை நிதி உதவி வழங்கும் நோக்கில் தான் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை அறிமுகப்படுத்தப் பட்டது.

ஆனால் இப்போது அந்தக் குறிக்கோள் வேறு திசையில் சென்று கொண்டிருக்கின்றது.

முன்னணிப் பாடசாலை அனுமதிக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கு என்றொரு நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் கடுமையான போட்டிப் பரீட்சையாக மாறியுள்ள 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சில சமயங்களில் விவேகமான மாணவர்கள் கூட சித்தியடைய முடியாது போய் விடுகின்றது.

அதனால் தேசிய கல்விக் கொள்கையில் சிபார்சு செய்யப்பட்டுள்ள இரண்டாவது புலமைப் பரிசில் பரீட்சை அவ்வாறான மாணவர்களுக்கு மீண்டும் வாய்ப்பை வழங்கும் என்று நம்ப முடிகின்றது.

அந்தப் பரீட்சையில் சித்தி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 25

சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒருமணிக்கு வித்தியாலய அதிபர் ச. சிவனேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

சண்டிலிப்பாய் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(இ-3)

★ ★ ★

சங்குவேலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் அதிபர் எஸ். செல்வராசா தலைமையில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். (இ-152)

★ ★ ★

காரைநகர் ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அதிபர் திருமதி தே. பாலசிங்கம் தலைமையில் நடைபெறும். வலயம்–1 பிரதிக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராக் கலந்து கொள்வார். (இ)

★ ★ ★

கரணவாய் பொன்னம்பல வித்தியாசாலை வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி வித்தியாலய அதிபர் க. பொன்னையா தலைமையில் எதிர்வரும் வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும்.

பிரதம விருந்தினராக கரவெட்டி வடமராட்சி தெற்கு பிரதேசசெயலர் செ. ஸ்ரீநிவாசன் கலந்து கொள்வார்.

(இ118)

## ஆசிரியர் சம்பளம் தாமதம்

ஏ நநகர், மார்ச் 25

யாழ்ப்பாணத்தில் கடமை புரியும் ஆசிரியர்களின் இம் மாதச் சம்பளம் நேற்று வரை வழங்கப்படவில்லை.

இச் சம்பளத்தை வழங்குவதற்குத் தேவையான கட்டு நிதி இதுவரை யாழ். கல்வித் திணைக்களத்துக்கு கிடைக்கவில்லை என யாழ். கல்வி வலயம் — 1 இன் கணக்குப் பகுதி தெரிவித்தது. (இ-51)

## சீருடை தைக்க கட்டணம் குறைப்பு

தென்மராட்சி, மார்ச் 25

சாவகச்சேரி நகரப் பகுதியில் ஆடைகள் தையல் வேலை செய்வோர் தமது தையல் கூலிகளைக் குறைத்துள்ளனர். குறிப்பாக பாடசாலை மாணவர்களின் சீருடைகளை அவர்கள் சீரான கட்டணத்தை அறவிட்டு தைத்துக் கொடுக்கவுள்ளனர்.

சாவகச்சேரி வணிகர் மன்றத்தினரால் நகர்ப்பகுதி தையல் வேலை செய்வோருக்கென அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் தையல் கூலியைக் குறைக்க முடிவு செய்யப்பட்டதாக வணிகர் மன்றத் தலைவர் டாக்டர் எஸ். எஸ். அருளானந்தம் தெரிவித்தார்.

(ஐ-117)

## அன்னை பூபதி நினைவு நிகழ்வுகள்

கொழும்பு மார்ச் 25

இந்திய அமைதிப்படை நிலைகொண்டிருந்த காலத்தில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மட்டக்களப்பில் சாகும் வரை உண்ணா விரதம் மேற்கொண்டு உயிர் நீத்த அன்னை பூபதியின் நினைவு நிகழ்வுகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் கடந்த 19 ஆந் திகதி முதல் நடைபெற்று வருகின்றன.

கிழக்கில் வவுணதீவு, கொக்கட்டிச்சோலை, போரதீவு, கரடியனாறு பகுதிகளில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறுவதாகவும் —

வன்னியின் பல இடங்களிலும் பூபதியை நினைவு கூர்ந்து பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-3-36)

## நாலந்த கொலை: 20 சந்தேக நபர்கள் நீதி மன்றில் ஆஜர்

நாலந்த எல்லாவெலவின் படுகொலையில் சம்பந்தப்பட்ட 20 சந்தேக நபர்கள் நேற்று இரத்தினபுரி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களில் ஒன்பது பேரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு மஜிஸ்திரேட் நீதிவான் அருணகிரி ரணசிங்க உத்தரவிட்டார்.

அடையாளம் காணப்படாத 11 சந்தேக நபர்கள் தலா 5000 ரூபா ரொக்கப் பிணையிலும் தலா ஒரு லட்சம் ரூபா உறுதிப் பிணையிலும் விடுவிக்கப்பட்டனர்.

(இ-5)

## யாழ். மரக்கறி வகைகள் கப்பலில் கொழும்புக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ்ப்பாணத்தில் அமோக விளைச்சலைத் தந்துள்ள மரக்கறி வகைகளை கப்பல் மூலம் கொழும்புக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மரக்கறி வகைகள் கூடுதல் விளைச்சலைப் பெற்ற காரணத்தால், விவசாயிகள் குறைந்த விலையில் அவற்றை விற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதையடுத்தே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாளை பருத்தித்துறையில் பொருள்களை இறக்கி முடிக்கும் 'வாதுவ' கப்பல் மூலம் இந்த மரக்கறி வகைகளை அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் —

மரக்கறி மற்றும் வெங்காயம் ஆகியவற்றை இக் கப்பலில் அனுப்ப விரும்புபவர்கள் உடன் யாழ். செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் — கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

## வவுணதீவு இராணுவ முகாமை மீள அமைக்கும் வேலை ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 25

விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்குள்ளான மட்டக்களப்பு வவுணதீவு இராணுவ முகாமை மீள அமைக்கும் பணியில் 500 பேர் கொண்ட விசேட படையணி தற்பொழுது ஈடுபட்டுள்ளது.

அப்பகுதியில் காவலரண்கள் மற்றும் பங்கர்களை அமைக்கும் பணிகள் தற்சமயம் நடைபெறுகின்றன.

இந்த முகாம் அமைக்கப்பட்ட பின்னர் அங்கு ஒரு மேஜர், ஒரு கப்டன், 2 லெப்டினன்ட்டுகள் பொறுப்பில் படையணிகள் நிலைகொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த முகாம் அமைக்கப்பட்ட பின்னரே வலையிறவுப் பாலம் ஊடாக பொதுமக்கள் செல்லவோ, வாகனங்கள் செல்லவோ அனுமதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3-150)

**நாளை**

**பங்குனி 13**

புதன்கிழமை

திதி: துதியை பிற்பகல் 01.06 வரை.

நட்சத்திரம்: சித்திரை பிற்பகல் 02.28 வரை

சுபநேரம்: 04.45 06.15

ராகுகாலம்: 12.15 01.45

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## வடமராட்சிகிழக்கில் பலஇடங்களில் மலத்தியோன்தெளிக்கப்படவில்லை

### பொது மக்கள் முறைப்பாடு

செம்பியன்பற்று, மார்ச் 25

வடமராட்சி கிழக்குப் பகுதிக்கென ஒதுக்கப்பட்ட மலத்தியோன் அப்பகுதியின் எல்லாக் கிராமங்களிலும் ஒழுங்காக விசிறப்படவில்லை என்று பலர் குறைப்பட்டுக் கொள்கின்றனர்.

செம்பியன்பற்றுப் பகுதியில் மூன்று தடவைகள் மலத்தியோன் தெளிக்கப்பட்டுள்ளது. ஏனைய சில கிராமங்களில் குறித்த இடங்கள் சிலவற்றில் மட்டுமே தெளிக்கப்பட்டது.

ஆனால் மாமுனைப் பகுதி, செம்பியன்பற்று வடக்கு, குடாரப்பு பகுதிகளில் இன்னும் ஒரு தடவை கூட மலத்தியோன் தெளிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-36)

## யாழ். விவசாயிகளுக்கு பிரேஸில் மண்வெட்டி

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு வழங்க பிரேஸிலில் இருந்து மண்வெட்டிகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண விவசாயிகளினால் பாவிக்கப்படும் வகையிலான இந்த மண்வெட்டிகள் தற்சமயம் கொழும்பு வந்து சேர்ந்துவிட்டன.

விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் கிடைக்கக்கூடியதாக 20 ஆயிரம் மண்வெட்டிகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

கொழும்பில் இருந்து கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டு அரச விற்பனைக் கூட்டுத்தாபன யாழ். கிளை மூலம் இவை விற்கப்படும். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுறுத்தல், ஆள்மாறாட்டங்கள் தேர்தலில் பெருமளவு இடம்பெற்றன

## வாக்களிப்பு குறித்து அமைப்பு அறிக்கை

மணிலா மார்ச் 25

உள்ளூராட்சித் தேர்தலில் வாக்குப் பதிவுகள் வன்முறை பெருமளவு தடைப்பட்டன. அச்சுறுத்தல்களும் ஆள் மாறாட்டங்களும ஏராள மாக நடந்துள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான தனது அறிக்கையில் சுதந்திரமான வாக்குப்பதிவுக்கான மக்கள் அமைப்பு''(People's Action For Free and Fair Election) மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

இந்த அமைப்பு தனது நான்கு பக்க அறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டது.

தேர்தல் அன்று இடம்பெற்ற அநாகரிக நடவடிக்கைகள் ஜனநாயக நடைமுறைகளுக்கு முற்றிலும் முரணானவை. பொது மக்கள் இதனைத் துணிந்து நின்று கண்டிக்க வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## பாடசாலை சீருடை இலவசம்

குருநகர், மார்ச் 25

யாழ். அப்போஸ்தலிக்க கார்மேல் கன்னியர்களினால் நடத்தப்படும் பாலர் பாடசாலையில் கல்விகற்கும் மாணவ - மாணவிகளுக்கு இப் பாடசாலை நிர்வாகத்தினால் சீருடை இலவசமாக அண்மையில் வழங்கப்பட்டது. (இ-51)

## காசநோய் தினத்தையொட்டி தடுப்பு முறைபற்றி கருத்தரங்கு

தென்மராட்சி, மார்ச் 25

சர்வதேச காசநோய் தினத்தையொட்டி நேற்று சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் காசநோய் தடுப்பு முறைகள் பற்றிய கருத்தரங்கு நடைபெற்றது.

இக் கருத்தரங்கில் யாழ். காசநோய் வைத்திய நிபுணர் டாக்டர் சி. இந்திரராசா கலந்து கொண்டு உரையாற்றினார்.

இதனையடுத்து சாவகச்சேரி ஆஸ்பத்திரி மார்புநோய் சிகிச்சைப் பிரிவில் தங்கியுள்ள நோயாளர்களுக்கு டாக்டர் சி. இந்திரராசாவினால் அன்பளிப்புப் பொதிகள் வழங்கப்பட்டன.

சாவகச்சேரி லயன்ஸ் கழகம் சாவகச்சேரி வைத்திய சாலை ஊழியர் நலன்புரிச் சங்கம் ஆகியவை இந்த அன்பளிப்புப் பொதிகளை வழங்கி இருந்தன. (இ-117)

## நிலுவையுடன் ஓய்வூதியம்

கொழும்பு, மார்ச் 25

இம்மாதம்முதல்ஓய்வூதியர்களுக்கு 5 சதவீத அதிகரித்த ஓய்வூதியம் வழங்கப்படும்.

1997 ஜனவரி மாதத்திலிருந்து அதிகரித்த நிலுவையுடன் ஓய்வூதியம் வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பாக ஓய்வூதியத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி பி. எம். பி. ஜெயவர்த்தனாவினால் சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் கடந்த வரவு-செலவுத்திட்டத்தில் ஓய்வூதியத்தில் 10 சதவீத அதிகரிப்பு கொண்டு வரப்படுமென அறிவித்திருந்தது. இதன் முதல் கட்டமாகவே தற்போது 5 சதவீத அதிகரிப்பு வழங்கப்படவுள்ளது.

இரண்டாவது கட்ட 5 சதவீத அதிகரிப்பு 1998 ஜனவரி முதல் அமுல் படுத்தப்படும் என ஓய்வூதிய திணைக்கள பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார். (இ-)

## மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய மகோற்சவ காலத்தில் கடைகள் அமைக்கத் தடை

வலிகாமம் தெற்கு, மார்ச் 25

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவ காலத்தில் கடைகள் அமைக்க அனுமதிப்பதில்லை என்று ஆலயத்தின் நிர்வாக சபைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

மகோற்சவ காலத்தில்விழாக்களை மிக எளிமையான முறையில் நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது

சரித்திரப் பிரசித்திபெற்ற மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இம் மாதம் 29 ஆம் திகதி சனிக்கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 18 தினங்கள் நடைபெற உள்ளன.

ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி நடைபெறும் தீர்த்த உற்சவத்துடன் விழா முடிவடையும்.

ஏப்ரல மாதம் 7 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு மஞ்சத்திருவிழாவும் —

ஏப்ரல் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை சப்பறத்திருவிழாவும் —

ஏப்ரல் 14 ஆம் திகதி திங்கட்கிழமை பகல் 11 மணிக்கு தேர்த்திருவிழாவும் சிறப்புத் திருவிழாக்களாக நடைபெறவுள்ளன.

இன்றைய காலகட்டத்தில் மக்கள் அநாவசியமாக கடைகளில் கூடுவதை தவிர்ப்பதற்காகவே தற்காலிக கடைகள் அமைக்க தடைவிதித்திருப்பதாக நிர்வாக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆலய நிர்வாக சபை கூட்டத்தில் இவ்வாறு தீர்மானம் செய்யப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திரு. நா. வேதநாயகன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. (அ-152)

### 8 ஆம் ஆண்டிலும்...

(ஏழாம் பக்கத் தொடர்)

யடையும் குறைந்த பொருளாதார வசதியுடைய மாணவர்களுக்கு பல்கலைக்கழகம் சென்று கல்வியைப் பூர்த்தி செய்யும் வரை தற்போது வழங்கப்படுவது போன்றே புலமைப்பரிசில் பணம் வழங்கப்படவிருக்கின்றது என்றும் அவர் சொன்னார்.

அதேநேரம் புதிய கல்விக் கொள்கை தொடர்பான சிபார்சுகளில் தற்போது நடைமுறையில் உள்ள ஆண்டு என்ற பதத்திற்குப் பதிலாக 'தரம்' என்ற பதம் பயன்படுத்தவும் ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வீதி திருத்தும் வேலைகள்

ஆனைக்கோட்டை சங்கரப்பிள்ளை வீதி நீண்ட காலத்தின் பின்னர் தற்போது திருத்தி அமைக்கப்பட்டு வருகிறது. (-இ100)

### கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்)

சுகாதார அமைச்சரும், முன்னாள் கொழும்பு மேயருமான எச். எம். பௌசி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பில் தமிழ் வாக்குக்கள் அரசுக்குக் கிடைக்கும் என்று கருதியே கணேசலிங்கத்தை தேர்தலில் நிறுத்தினோம். ஆனால் எதிர் பார்த்த பலன் கிடைக்கவில்லை.

எனினும் அரசாங்கத்தின் பணிகள் தொடரும்.

இப்படி அமைச்சர் பௌசி மேலும் கூறினார். (இ-3-150)

### ஊர்காவலர்...

(முதலாம் பக்கத் தொடர்)

காலை இடம்பெற்றது.

இவரது ஆயுதமும் வெடி மருந்தும் எடுத்துச் செல்லப் பட்டுவிட்டன.

விடுதலைப் புலிகளினாலேயே இவர் சுடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-5)

### மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்)

களில் இருதொகுதியினர் இம்மாதம் 10 ஆம், 17 ஆம் திகதிகளில் வள்ளங்கள் மூலம் குடாக்கடலினூடாக குருநகர் இறங்குதுறைக்கு வந்து சேர்ந்தது தெரிந்ததே.

10 ஆம் திகதி 205 பேரும் 17 ஆம் திகதி 500 பேரும் வந்திருந்தனர் (இ-51)

### 3 கப்பல்களில்...

(முதலாம் பக்கத் தொடர்)

அறிவித்துள்ளது.

யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் பதிவு செய்தவர்களில் பட்டியல் இலக்கம் 548க்கு உட்பட்டவர்களை இன்று காலை 7 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

அதே சமயம் யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் கப்பல் மூலம் திருகோணமலை செல்ல பதிவு செய்தோரில் 521, 522, 523 ஆகிய பட்டியல் இலக்கமுடையவர்கள் ஏப்பிரல் மாதம் முதலாம் திகதிக்கு முன்பாகச் செல்லத் தவறின் அவர்களது பயணப் பதிவுகள் இரத்துச் செய்யப்படும் என்றும் —

பின்னர் அவர்கள் புதிதாக விண்ணப்பிக்க வேண்டும் என்றும்— அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இம்மாதம் 18 ஆம் திகதி திருகோணமலையிலிருந்து காங்கேசன் துறைக்கு கப்பல் மூலம் வந்த பயணிகளின் பொதி ஒன்று கண்டெடுக்கப்பட்டு யாழ். பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு உள்ளதாகவும் —

உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி அதனைப் பெற்றுக் கொள்ளுமாறும் யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-3-5)

## கலைப்பீடாதிபதியாக சண்முகதாஸ்

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் கலைப்பீடாதிபதியாக தமிழ்த்துறைத் தலைவரும், முதுதமிழ்ப் பேராசிரியருமான கலாநிதி அ. சண்முகதாஸ் நேற்றுப் பதவி ஏற்றார்.

பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நேற்று நடைபெற்ற கலைப்பீடாதிபதி தேர்வில் தெரிவு செய்யப்பட்டதை அடுத்து பேராசிரியர் சண்முகதாஸ் பதவியைப் பொறுப்பேற்றார்.

பிரிட்டனின் எடின்பரோ பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டம்பெற்ற பேராசிரியர் சண்முகதாஸ் பேராதனை பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக நியமிக்கப் பட்டார். 1975 ஆம் ஆண்டில் யாழ். பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை விரிவுரையாளராகவும், 1984 ஆம் ஆண்டில் இணைப்பேராசிரியராகவும், 1990 ஆம் ஆண்டில் தமிழ்துறை பேராசிரியராகவும் பதவி உயர்வு பெற்றார். சர்வதேச ரீதியில் நடைபெற்ற தமிழ்மொழி சம்பந்தமான கருத்தரங்குகளிலும் உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளிலும் பிரதிநிதியாகக் கலந்து கொண்டு தமிழுக்குத் தொண்டாற்றியவர் பேராசிரியர் சண்முகதாஸ்.

### மகிந்த ரட்ண...

(முதலாம் பக்கத் தொடர்)

இதே நேரம் இரத்தினபுரி மாநகர சபையைக் கைப்பற்றிய பொ. ஐ முன்னணியின் பட்டியலில் விருப்பு வாக்குகளில் முதலாவதாகத் தெரிவு செய்யப்பட்டவர் பெற்ற வாக்குகள் 4596 மட்டுமே.

இந்த வழக்கில் மற்றுமொரு சந்தேக நபரான எம். எல். டி. என். ஆனந்த மடுவெல குருவிட்ட பிரதேச சபைக்கு ஐ. தே. கட்சியின் பட்டியலில் போட்டியிட்டு அந்தப்பட்டியலில் 4719 விருப்பு வாக்குகள் பெற்று முதலாவதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். (இ-10)

### முல்லை...

(முதலாம் பக்கத் தொடர்)

கடற்படையினர் தரப்பில் ஒருவர் இறந்ததாகவும் —

8 கடற்படையினர் காயமடைந்ததாகவும் —

கடற்படைப் படகு ஒன்று சிறிது சேதம் அடைந்ததாகவும் — பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

புலிகளின் தரப்பில் 80 பேர் வரை இறந்தும் 50 பேர் வரை காயமடைந்தும் உள்ளனர் என்றும் நடவடிக்கைத் தலைமை அலுவலகம்மேலும் தெரிவித்தது.

இந்தச் சம்பவம் குறித்து பக்கச் சார்பற்ற தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்று ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகையின் இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் தெரிவித்தார்.

திருகோணமலை கடற்படைத் தளத்திலிருந்து 4 டோறாப் படகுகள் உட்பட ஏழு கடற்படைப் படகுகள் நேற்று அதிகாலை வடக்கு நோக்கிச் சென்று கொண்டிருந்தன.

இந்தப் படகுகள் முல்லைத் தீவுக்கரையில் இருந்து சுமார் 20 மைல் தூரத்தில் சென்று கொண்டிருந்தபோது அதிகாலை 1.45 மணி அளவில் கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்குமிடையே மோதல் மூண்டது.

இந்த மோதல் அதிகாலை 5 .45 வரை இடம்பெற்றதாகத் தெரியவருகிறது.

கொழும்புத் தகவல்களின் படி விடுதலைப் புலிகளின் சுமார் 20 இலிருந்து25 வரையான படகுகள் கடற்படைப் படகுகளை சுற்றிவளைத்துத் தாக்க ஆரம்பித்தன அப்பொழுது கடற்படை வீரர் ஒருவர் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது —

சுமார் 75 இலிருந்து 100 பேர் வரை விடுதலைப் புலிகள் தரப்பில் கொல்லப்பட்டதாக இராணுவத் தலைமையகம் தெரிவிக்கிறது.

இந்தச் சம்பவம் பற்றி பக்கச்சார்பற்ற தகவல்கள் எவையும் கிடைக்கவில்லை.

இவ்வாறு இக்பால் அத்தாஸ் தெரிவித்தார்.

### அரசு-விடுதலைப்...

(முதலாம் பக்கத் தொடர்)

இலங்கையில் உள்ள சகல மக்களும் சமாதானமாக வாழ வேண்டும் என்று இந் நாட்டு மக்கள் அனைவரிடமும் நான் விண்ணப்பிக்கின்றேன்.

இந்த நாட்டுமக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து சமாதானத்தை அடைவார்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு உண்டு.

சமாதானத்தை உருவாக்கும் பொருட்டு. இந்நாட்டின் தலைவி சந்திரிகா குமாரதுங்கா தீர்வு ஒன்றைக் கொண்டு வருவதற்காக எடுத்து வரும் முயற்சிகளை நான் ஆதரிக்கிறேன்.

தீர்வு ஒன்றைக் கொண்டு வருவதற்கான முயற்சியில் ஈடுபடுவதற்கு நான் தயாராக உள்ளேன்.

இரு தரப்புகளுக்குமிடையில் உடன்பாடுஒன்றை ஏற்படுத்துமுகமாக சமரசப் பேச்சுக்கள் நடைபெறுவதற்கு மத்தியஸ்தம் வகிக்கவும் நான்தயார்.

இலங்கையிலுள்ள மக்களும் அரசியல் கட்சிகளும் இணைந்து, பலஸ்தீன மக்கள் செய்தது போல அமைதியாக வாழ்வதற்குப் பாடுபட வேண்டும். இன்றைய உலகின் போக்குக்கு ஏற்ப சமாதானத்தை உருவாக்க உழைக்க வேண்டும்.

நட்புறவு மிக்க இந்த அழகிய நாட்டின் மக்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக எடுக்கும் முயற்சிகள் பாராட்டத் தக்கவை.

போரை முடிவுக்குக் கொண்டு வந்து அமைதியை நிலைநாட்டுவதற்கு புதிய உலக நிலைமையை இலங்கை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

நான் இங்கு இதயபூர்வமாகப் பேசுகின்றேன்.பலஸ்தீனப் போராட்டத்துக்கு இலங்கை பெரிய அளவில் உதவியதை நாம் மறுக்க முடியாது. நட்புறவு மிக்க இலங்கை மக்களை நான் சகோதரர்களாகக் கருதியே இங்கு பேசுகிறேன்.

இந்தப் பிராந்தியம் தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் ஐக்கியப்பட்ட பலம் வாய்ந்த ஓர் அரங்காக விளங்க முடியும் என்று நான் நம்புகின்றேன் —என்றுசொன்னார்.

முன்னதாக பலஸ்தீன அதிபர் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இலங்கை வந்து சேர்ந்தார்.

பண்டாரநாயக்க சர்வதேசவிமான நிலையத்தில் அவருக்கு அரச மரியாதை வழங்கப்பட்டது. வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், தொழில், தொழில் பயிற்சி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் அரபாத்தை வரவேற்றனர். அரபாத்துக்கு மரியாதை செலுத்துமுகமாக 21 பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. அதன் பின்னர் இராணுவ மரியாதை அளிக்கப்பட்டது. விமானநிலையத்தில் வைக்கப்பட்டுள்ள அரச பிரமுகர்கள் கையெழுத்திடும் புத்தகத்திலும் அரபாத் கையொப்பமிட்டார்.

பின்னர் அரபாத் உட்பட தூதுக்குழுவினர் விமானப் படையின் விசேட ஹெலிக்கொப்ரரில் கொழும்பு சென்றனர்.

யசீர் அரபாத் நேற்று பிற்பகல் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை அவரது இல்லத்தில் சந்தித்து பல்வேறுவிடயங்கள் பற்றிக்கலந்துரையாடினார். (அ-5)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேட்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25-03-1997இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org